


விலை
ரூபா 40

பக்கங்கள் - 12

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 62 குரோதி வருடம் மார்கழி மாதம்
18 ஆம் திகதி வியாழக்கிழமை ஹிஜ்ரி 1446 ரஜப் 02 (02.01.2025)




### வறுமை ஒழிப்பு ; ஊழல் மோசடி ஒழிப்பு ; கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம்

# 03 முக்கிய இலக்குகளில் கவனம் செலுத்தும் அரசு





'Clean Srilanka' (கிளீன் ஸ்ரீலங்கா) திட்டத்தின் ஊடாக வீழ்ச்சிய டைந்துள்ள நாட்டை முழுமையாக மீள கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரி வித்தார்.

க்ளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை நேற்று புதன்கிழமை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

புதிய வருடத்தில் புதிய பரிணாமத்திற்கு செல்லவேண்டிய சவால் அரசாங்கத்திற்கு காணப்படுகிறது. குறித்த சவாலை நிறைவேற் றுவதற்கு முழு அரசியல் அதிகாரமும் துணை நிற்கும்.

புதிய அரசியல் கலாசாரத்தின் கீழ்தான் புதிய வருடம் ஆரம்பமா கிறது. மக்களுக்கு எதிராக அனைத்து அரசியல் நடவடிக்கைகளும் தோல்வி கண்டுள்ளன.

எமது பொருளாதாரம் கடந்த பல தசாப்தங்களாக பாரிய வீழ்ச்சியை அடைந்திருந்தது. பொருளாதாரம் அதளபாதாளத்தில் வீழ்ந்திருந்தது. தற்போது பொருளாதாரத்தை ஓரளவு ஸ்தரிப்படுத்தியுள்ளோம். புதிய வருடத்தில் பொருளாதார வளர்ச்சியை அடைய எதிர்பார்க்கிறோம்.

நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளோம். அறுகம்பவை மையப்படுத்தி தாக்குதல் நடத்த உள்ளதாக தகவல்கள் வெளியாகியி ருந்தன. எமது பாதுகாப்பு துறை அந்த (தொடர்ச்சி...) 02

## 'கிளீன் ஸ்ரீலங்கா' போல் இனப்பிரச்சினையிலும் கிளீன் வேண்டும்

( பு.கஜிந்தன் )



கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் போன்று இனப்பிரச்சினையையும் இந்த அரசாங் கம் கிளீன் செய்ய வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று அவர் நட த்திய ஊடக சந்திப்பிலேயே இந் த விடயத்தை (தொடர்ச்சி...) 02

## பிரச்சினைக்கு தீர்வு கண்டால் அரசாங்கம் அஞ்சத்தேவையில்லை



(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை தீர்க்கப் பட்டு,பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக ஒழிக்கப் பட்டால் அனுர அரசாங்கம் பொருளாதார ரீதியில் அச்சப்பட வேண்டிய அவசியம் ஏற்படாது எனவன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடை க்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று (01) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

புலம்பெயர்ந்துள்ள (தொடர்ச்சி...) 02

## பெப்ரவரி 17 இல் வரவு - செலவு திட்டம்

2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தை (வரவு-செலவுத்திட்ட விவாதம்) 2025 பெப்ரவரி 18ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை நடத்துவதற்கு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நாடாளுமன்றத்தில் (31) நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் (தொடர்ச்சி...) 02

## அநுரவின் அரசாங்கத்திலும் வடக்கில் இராணுவ மயமாக்கல்

### புலம்பெயர் தமிழர்கள் கண்டனம்

தமிழர் தாயகத்தில் இராணுவ ஆக் கிரமிப்புகள் கடந்த காலத்தில் உக்கிர மடைந்ததை போன்று, ஜனாதிபதி அநுரகு மார திசாநாயக்கவின் அரசாங்கத்தின் கீழும் இந்த நடவடிக்கை ஆழமடைந்து வருவதாக புலம்பெயர் தமிழர்கள் கவலைய டைந்து ள்ளனர். "மக்கள் மத்தியில் மாற்றத்திற்கான நம்பிக்கைகள் இருந்தபோதிலும்,வட க்கு மற்றும் கிழக்கில் இராணுவ ஸ்தாபனங் களாக மாறுவேடமிட்டு புதிய "தடுப்பு மைய ங்கள்" என நிறுவப்படுவது வேறுவிதமாக சமிக்ஞை செய்கிறது. (தொடர்ச்சி...) 02

## பஸ் கட்டணம் உயரும் சாத்தியம்



எரிபொருள் விலை திருத்தம் தொடர்பா ன அரசாங்கத்தின் தீர்மானங்களினால் பஸ் கட்டணத்தை குறைப்பது மக்களின் தொலைதூர கனவாக மாறியுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன (தொடர்ச்சி...) 02

## இலங்கை சுங்கத்துக்கு 1.5 ட்ரில்லியன் வருமானம்

(கனூஷியா புஷ்பகுமார்)

இலங்கை சுங்கத்துறை கடந்த வருடத்தில் 1.5 ட்ரில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வருமானத்தை பதிவு செய்துள்ளது.

அதன்படி, கடந்த வருடம் 1.515 இலட்சம் கோடி ரூபா வருமானம் பதிவாகியுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளரும், மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகமுமான சீவலி அருக்கொட தெரிவித்தார்.

வருடமொன்றில் இலங்கை சுங்கத்தால் ஈட்டப்பட்ட அதிகூடிய வருமானமாக இது பதிவாகியுள்ளது. 2024ஆம் ஆண்டுக்காக அரசாங்கம் வழங்கிய (தொடர்ச்சி...) 02

### கொவிட் தகனம்;

## தெரிவுக்குழு நியமிக்க கோரி சபையில் தனி நபர் பிரேரணை



கொவிட் 19 தொற்று நோயினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை(ஜனாஸா)பலாத்காரமாகத் தகனம்செய்தமை தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு பொருத்தமான விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமிக்குமாறு கோரி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக் கீம் நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையொ ன்றை முன்வைத்துள்ளார். திகதி குறிப்பிடப்படாத அந்தப் பிரேரணை (பா.28/2024) நாடாளுமன்ற ஒழுங்கு புத்தகத்தில் (தொடர்ச்சி...) 02

## பாதுகாப்பு படைகளை நவீனமயப்படுத்தும் முயற்சி தமிழரின் சுயாதீன செயல்பாடுகளுக்கு அச்சுறுத்தல்

### -வடக்கின் அரசியல் ஆய்வாளர்கள்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் இராணுவத்தை நவீனமயப்படுத்த இடம்பெறும் முயற்சிகள் தமிழர் பகுதிகளில் இராணுவத்தின் பிரசனத்தை அதிகரிக்க வழிவகுக்கும் என வடக்கின் அரசியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சமகால அரசாங்கத்தின் கீழ் பாதுகாப்புப் படைகளை நவீனமயமாக்குவதற்கான அதிகபட்ச முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு பெற்ற) சம்பத் துயகொந்தா (தொடர்ச்சி...) 02

## சமூக செயற்பாட்டாளர் நாமல் குமார கைது

(கனூஷியா புஷ்பகுமார்)

சமூக செயற்பாட்டாளர் நாமல் குமார கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரி வினரால் அவர் நேற்று (01) பயங்கர வாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்ய ப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தின் நற்பெயருக்கு களங்கம் விளை விக்கும் வகையில் (தொடர்ச்சி...) 02



யாழ். சங்கானையில்

2025 : புத்தாண்டு தினத்தில் யாழ்ப்பாணம்- சங்கானை பிரதேச செயலகத்தில் நடந்த உறுதிப்பிரமாண நிகழ்வு.

## அதிரடி நடவடிக்கைகளுக்கு தயாராகும் அரசாங்கம்

### முக்கிய அரசியல்வாதிகள் கைதாகும் சாத்தியம்?

( ஆர்.மனோசங்கர் )

பல்வேறு மோசடி மற்றும் ஊழல் வழக்குகளில் தொடர்புடைய ஒரு முக்கிய அரசியல் பிரமுகரின் செல்வாக்கு மிக்க மனைவி உட்பட ஐந்து அரசியல்வாதிகள் இந்த ஆண்டு தொடக்கத்தில் கைது செய்யப்படுவார்கள் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

நம்பகமான அரசாங்க வட்டாரங்களை மேற்கோள்காட்டி சிங்கள ஊடகம் ஒன்று இது குறித்து செய்தி வெளியிட் டுள்ளது. 02 (தொடர்ச்சி...)

## பாதுகாப்பு...

தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை திருகோணமலை கடற்படை மற்றும் கடல்சார் கற்கை நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"இலங்கையின் பாதுகாப்புப் படைகளை அதிநவீன தொழில்நுட்பங்கள் மற்றும் உபகரணங்களுடன் நவீனமயமாக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. நவீனமயப்படுவதன் ஊடாக பாதுகாப்புப் படைகள் நாட்டைப் பாதுகாப்பதில் சிறந்த பங்களிப்பை வழங்க முடியும். ஆயுதப் படை கட்டமைப்பை மதிப்பாய்வு செய்ய நாங்கள் எதிர்பார்க்கிறோம். வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதை உறுதிசெய்யவும், ஆட்சேர்ப்புகளைச் செயல்படுத்துவதன் மூலம் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும், பணியாளர் தேர்வில் அளவை விட தரத்தில் கவனம் செலுத்தவும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்." என்றும் அவர் கூறியுள்ளார்.

யுத்தத்தின் போது 400 இற்கும் மேற்பட்ட ஹெலிகப்டர் தாக்குதல்களை நடத்தியவராக பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துய்யகொண்டா இருக்கிறார். இலங்கை பாதுகாப்பு படைகள் நடத்திய தாக்குதல்களில் பல்லாயிரக்கணக்கான தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக குற்றச்சாட்டுகள் உள்ளன. கண்மூடித்தனமாக மருத்துவமனைகள் மீது குண்டுவீச்சு தாக்குதல்கள் இடம்பெற்றிருந்தாக சர்வதேச அமைப்புகள் பல போர்க்குற்றச்சாட்டுகளை இலங்கை இராணுவத்தின் மீது சுமத்தியுள்ளன.

அதேபோன்று பாதுகாப்பு வளையங்கள் மீதும் வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டதான குற்றச்சாட்டுகள் உள்ளன. 400 இற்கும் மேற்பட்ட தாக்குதல்களை நடத்த தலைமைத் தாங்கியுள்ள தற்போதைய பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துய்யகொண்டாவின் செயல்பாடுகள் தமிழ் பகுதிகளில் எதிர்காலத்தில் பாரிய அச்சுறுத்தலான சூழ்நிலைகளை உருவாக்க வாய்ப்புகள் இருப்பதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கிக்றனர்.

குறிப்பாக சமகால அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின்னர் இராணுவ மற்றும் பாதுகாப்பு தரப்பின் உடைகள் அணிந்த வண்ணம் வடக்கின் பாடசாலை நிகழ்வுகள் மற்றும் சில நிகழ்வுகளில் படையினர் தோன்றுவது ஆபத்தானதாகும்.

இப் பகுதிகளில் இராணுவமயமாக்கல் என்பது தமிழர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. இலங்கை அரசாங்கம் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் விரிவான கண்காணிப்பு பொறிமுறைகளை நடைமுறைப்படுத்துவது தமிழ் மக்களின் அரசியல் செயல்பாடுகளுக்கும் எதிர்காலத்தில் அச்சுறுத்தலான சூழ்நிலைகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

பளை வத்திறியான் பகுதியில் இளம்பிறை பாலர் பாடசாலையைச் சேர்ந்த சிறார்களுக்கு 10ஆவது விஜயபாகு காலாட்படை படைப்பிரிவின் படையினர் 'சத்தான மதிய உணவு' வழங்கும் நிகழ்வொன்றை நடத்தியுள்ளனர். இவர்கள் அனைவரும் சீருடை அணிந்தே குழந்தைகளுக்கு உணவு வழங்கியுள்ளனர். இதுதொடர்பிலான புகைப்படங்களும் உள்ளன.

போர்க்குற்றவாளி எனக் கூறப்படும் மேஜர் ஜெனரல் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த ஒக்டோபர் மாதம் யாழ்ப்பாணம் பூநகரி வைத்தியசாலையில் இரத்ததான நிகழ்வொன்று நடைபெற்றது. சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டம் **(ITJP)** வெளியிட்ட ஆவணத்தின்படி, 2008- 2009 காலப்பகுதியில் போரின் உச்சக்கட்டத்தில் விக்கிரமசிங்க முன்னணியில் போரில் ஈடுபட்ட 8வது படைப்பிரிவான கஜபா படைப்பிரிவுக்கு தலைமை தாங்கியவர்கள் எனக் கூறப்படுகிறது.

## பஸ் கட்டணம்...

தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜுலை மாதத்திற்கு பின்,செலவுகளை நிர்வகிக்க பஸ் கட்டணத்தை கணிசமாக உயர்த்த வேண்டிய நிலை ஏற்படும்" எனவும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசாங்கத்தின் நிர்வாகத்தை தொடர்ந்து எரிபொருள் விலை குறையும் என பொதுமக்கள் எதிர்பார்த்துள்ளனர்.இந்த புத்தாண்டின் தொடக்கத்தில் எரிபொருள் விலை குறையும் என எதிர்பார்த்தோம், ஆனால் அந்த நம்பிக்கை தற்போது கனவாக மாறியுள்ளது.பஸ் கட்டணம் குறைக்கப்பட வேண்டுமானால், கொள்கை கணக்கீட்டின்படி டீசல் விலையை குறைந்தது 30 ரூபாவால் குறைக்க வேண்டும். மேலும்,எரிபொருள் விலை மட்டுமின்றி, உதிரிப் பாகங்கள் மற்றும் இதர உபகரணங்களின் விலையும் குறைய வேண்டும். தனியார் பஸ் சேவை தற்போது நெருக்கடியான நிலையில் உள்ளது. எனவே, இந்த ஆண்டு ஜுலை மாதத்திற்கு பின்,செலவுகளை நிர்வகிக்க பஸ் கட்டணத்தை கணிசமாக உயர்த்த வேண்டிய நிலை ஏற்படும்" என்றார்.

இதேவேளை, சாதாரண புத்தம் புதிய பஸ் ஒன்றின் விலை 16 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதுடன் அதன் பராமரிப்பு செலவுகளும் அதிகரித்துள்ளன. இது தவிர்க்க முடியாத பஸ் கட்டண உயர்வுக்கு வழிவகுக்கும் என அவர் கூறினார்.

## இலங்கை...

1.533 இலட்சம் கோடி ரூபா வருமான இலக்கை இலங்கை சுங்கம் அடைய முடிந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

## வறுமை ஒளிப்பு...

முயற்சியை தோல்வியடைய செய்திருந்தனர். எமது நாட்டில் நீதியை நிலைநாட்டும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அரசியல் அதிகாரத்துக்கு மேல் உள்ளவர்கள் சட்டத்தையும் அரசியலமைப்பையும் மீறியிருந்தனர்.

நாட்டில் மீண்டும் சட்ட ஆட்சியை ஏற்படுத்த நாம் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறோம். அதேபோன்று ஊழல் – மோசடிகள் புற்றுநோயை போன்று முழு நாட்டிலும் ஒட்டிக்கொண்டுள்ளது. அதனை ஒழிக்க நாம் பாரிய முயற்சிகள் எடுத்துள்ளோம்.

குற்றப்புலனாய்வு பிரிவு, பொலிஸார் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் இதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவார்கள் என எதிர்பார்க்கிறோம். அரசியல்வாதிகளாக நாம் அதற்கான முன்னுதாரணங்களை காண்பித்துள்ளோம். ஆனால், அரசியல்வாதிகளின் முன்னுதாரணம் மாத்திரம் போதாது. அரசியல் நிறுவனங்களின் முழுமையான கட்டமைப்பும் இதற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

அன்று பிரதான விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தியுள்ளோம். வறுமையில் உள்ளவர்களை அதிலிருந்து மீட்டெடுக்க வேண்டும். பொருளாதாரம் சிறியதொரு தரப்பினரிடம் இருக்கும் போது அந்தப் பொருளாதாரம் வளர்ச்சியடையாது. வரவு – செலவுத் திட்டத்தில் புதிய பொருளாதாரத் திட்டங்கள் முன்மொழியப்படும்.

இரண்டவாது ஊழல் மோசடியை ஒழிக்க நாட்டியை டிஜிட்டல்மயப்படுத்த வேண்டும். அடுத்தப்படியாக கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம். இதன் ஊடாக சுற்று சூழலை சுத்தப்படுத்துவது மாத்திரமல்ல நோக்கம். வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை முழுமையாக மீள கட்டியெழுப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்." என்றார்.

தொடர்ந்துரையாற்றிய அவர்,

எமது **Clean Sri Lanka** வேலைத்திட்டத்தின் கீழ், சமூகத்திற்கு ஒரு புதிய நெறிமுறைக் கட்டமைப்பையும்,



மதிப்புக் கட்டமைப்பையும் உருவாக்குவோம். வாகன விபத்துகளை குறைக்க வேண்டும். அதற்காக, நான் முதலில் சட்டத்தின் மீது நம்பிக்கை கொள்ளவில்லை. மக்கள் மீதே நம்பிக்கை கொண்டுள்ளேன். அதற்காக மக்களின் ஒத்துழைப்பும் தலையீடும் அவசியம். அவர்கள் அவ்வாறு செய்யாவிட்டால் நாம் சட்டத்தை நடைமுறைப்படுத்த தயார். மிகவும் நெகிழ்வுத் தன்மையுடன் இந்த மாற்றத்தை ஏற்படுத்த நாம் தயார். நெகிழ்வுத் தன்மையுடன் இந்த திருப்புமுனையை ஏற்படுத்த எவரேனும் தடையாக நிற்கும் பட்சத்தில், இந்த சமூகத்தை மீண்டும் குணப்படுத்த கடுமையான முறையில் திருப்புமுனையை ஏற்படுத்தவும் நாம் தயார். அதேபோல், எமது நாட்டின் பிரஜைகளுக்கு தாம் சந்தைகளில் கொள்வனவு செய்யும் உணவுப் பொருட்கள் குறித்து நம்பிக்கை உள்ளதா? அதனால் எமது நாட்டு பிரஜைகளுக்கு விசமற்ற உணவு வேளையை வழங்கும் பொறுப்பு நாடு என்ற வகையில் எமக்கு இருக்கிறது. பொறுப்பை நிறைவேற்றுவதும் இந்த **Clean Sri Lanka** வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப் பட்டுள்ளது. மேலும், ஒரு சமூகத்தினால் நமது பிரஜைகள், நம் நாட்டின் அங்கவீனமுற்ற சமூகங்கள் என்பவற்றை பராமரிக்க வேண்டும் என்றார்.

## சமூக செயற்பாட்டாளர்...

சமூக ஊடகங்களில் பரவி வரும் குரல் பதிவு தொடர்பாக சமூக செயற்பாட்டாளர் நாமல் குமார கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்துக்கு எதிராக வெறுப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பாக நடிகரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ரஞ்சன் ராமநாயக்கவிடம் கொழும்பு குற்றப்பிரிவு நேற்று முன்தினம் (31) விசாரணை நடத்தியுள்ளது.

சிவில் செயற்பாட்டாளரான நாமல் குமாரவினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் இதற்கு முன்னர் அவரிடம் வாக்குமூலங்களையும் பதிவு செய்திருந்தனர். இது தொடர்பில் நாமல் குமாரவிடம் வாக்குமூலம் பெற உள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தது.

## அநுரவின்..

கடந்த 30ஆம் திகதி இலங்கையின் பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவின் கையொப்பத்துடன், வெளியான வர்த்தமானி அறிவித்தல் ஊடாக முல்லைத்தீவு விமானப்படைத் தளம் "தடுப்பு மையமாக" அறிவிக்கப்பட்டுள்ளது. மறுநாள் 31ஆம் திகதிமுதல் இதன் நடவடிக்கைகளும் ஆரம்பமாகியுள்ளன. இந்த விடயம் அப்பகுதியில் வாழும் தமிழர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

முல்லைத்தீவு கடலில் இலங்கைக் கடற்படையினரால் மீட்கப்பட்ட 103 மியன்மார் அகதிகள் ஏற்கனவே தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை மிரிஹான தடுப்பு முகாமில் தங்க வைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த போதிலும், அங்கு போதிய வசதிகள் இல்லாததால் முல்லைத்தீவுக்கு மாற்றப்பட்டனர். தமிழர் தாயகம், மக்களின் விருப்பத்தையும் நலனையும் புறக்கணித்து, அரச கொள்கைகளுக்கான கருவியாக வடக்கு, கிழக்கு நிலப்பரப்பு தொடர்ந்து பயன்படுத்தப்படுகிறது என்பதை இந்த முடிவு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

மேலும், வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு தமிழர்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்துவரும் நிலையில், இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் உள்ளன. மாறாக இந்த முகாம்கள் போதைப்பொருள் மறுவாழ்வு மையங்களாகவும் தடுப்பு காவல் நிலையமாகவும் மீண்டும் உருவாக்கப்பட்டு தமிழ் மக்களை மேலும் ஓரங்கட்ட அரசாங்கம் முற்படுகிறது.

இராணுவ ஆக்கிரமிப்பை அகற்றி வரலாற்று அநீதிகளை நிவர்த்தி செய்யும் அரசாங்கத்தை எதிர்பார்த்து அண்மைய தேர்தல்களில் ஜே.வி.பி.யை ஆதரித்த தமிழர்களுக்கு இது ஒரு எச்சரிக்கை மணியாக இருக்க வேண்டும். மாறாக, தமிழர்களின் உரிமைகளையும் இறையாண்மையையும் நீண்டகாலமாக மறுத்த அதே அடக்குமுறை உத்திகளின் தொடர்ச்சியையே நாம் காண்கின்றோம்.

சர்வதேச சமூகம் மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் இந்த விடயங்களை கவனத்தில் கொள்ளுமாறும், தமிழர் பிரதேசங்களை இராணுவமயமாக்குவதை நிறுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்குமாறும் தமிழ் மக்கள் தமது தாயகத்தில் சுதந்திரமாக வாழ்வதற்கு நீதியும் பொறுப்புக்கூறலும் மேலோங்க வேண்டும் என்றும் புலம்பெயர் தமிழர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## பிரச்சினைக்கு...

எம் உறவுகள், எம் நாட்டை உயர்த்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன. எனவே நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக ஒழிக்கப்படல் வேண்டும். இதனை ஜனாதிபதி கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் 13 ஆவது திருத்தச் சட்டம், இந்திய இலங்கை ஒப்பந்தம் இவை அனைத்தையும் நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில் செயற்பாடுகள் அமைவது அவசியம்.

பிரிந்து செயல்படுகின்ற தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். நாங்கள் ஒற்றுமையாக செயற்படவில்லையென்றால் நம் மண்ணையும் மக்களையும் உதாசீனம் செய்யும் கட்சிகளாகவே நாம் இருப்போம். எதிர்வரும் காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக செயற்படாவிட்டால் தேசியக்கட்சிகள் இல்லாமல் போகும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

எனவே வருகின்ற தேர்தல்களில் நாங்கள் ஒற்றுமையாக செயல்படவில்லை என்றால் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள அனுர அலை வடக்கு கிழக்கிலும் ஏற்படும்.

தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாக செயல்பட வேண்டும் என்பதே எமது மக்களின் எதிர்பார்ப்பு. அந்த ஒற்றுமை இல்லை என்றால் நாங்கள் காணாமல் போய் விடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கொவிட் தகனம்...

இடம் பெற்றுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் பிரஸ்தாப பிரேரணையில் குறிப்பிட்டுள்ளதாவது:

கொவிட் 19 தொற்றினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை நல்லடக்கம் செய்வதற்கான இயலுமை உள்ளதென உலக சுகாதார ஸ்தாபனம் அறிவுறுத்தல்களை வழங்கியிருந்த நிலையில், மேற்படி சடலங்ளை நல்லடக்கம் செய்வதால் நிலக்கீழ் நீரில் வைரஸ் கலப்பதற்கான அபாய நிலை உள்ளதாகக் கூறி கடந்த அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கை அளவிலான தீர்மானத்தின்படி செயற்பட்டமையும், அந்த சடலங்களை உறவினர்களின் உடன்பாடின்றி தகனம் செய்தமையும் , பின்னர் அவ்வாறு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் செயற்பட்டமை சரியானதல்ல, தவறு என்று தெரிவித்து அரசாங்கமே உத்தியோகபூர்வமாக மன்னிப்பு கோரியிருந்தமையும் இந்த தொற்றினால் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு தமது சமய ரீதியான இறுதிக் கிரியைகளை மேற்கொள்வதற்கோ அல்லது குறித்த சடலங்களை பார்வையிடுவதற்கோ சந்தர்ப்பம் வழங்கப்படாமையும் இது குறித்து உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் எழுந்த எதிர்ப்புகள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக தகனம் செய்வதற்குப் பதிலாக ஓட்டமாவடியில் , மஜ்மா நகர் எனப்படும் தனிமையான பிரதேசத்தில் மேற்படி சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட போதிலும், குடும்ப உறவினர்கள் இறுதி கடமைகளைச் செய்வதற்கோ, மரியாதை செலுத்துவதற்கோ, உரிமை மறுக்கப்பட்டமை தொடர்பிலும், இந்த விவகாரத்தில் அரசாங்கம் பாரதூரமான தவறுகளை புரிந்துள்ளமையினாலும் குறிப்பிட்ட விடயங்களை உரிய முறையில் விசாரணை செய்து பொருத்தமான விதந்துரைகளை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமிக்கும்படியாக அந்தப் பிரேரணையில்

## பெப்ரவரி...

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கிட்டுச் சட்டமூலம் முதலாவது மதிப்பீட்டுக்காக 2025 ஜனவரி 09ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு அமைய 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு (வரவுசெலவுத்திட்ட உரை) பெப்ரவரி 17ஆம் திகதி இடம்பெறவிருப்பதுடன், இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் பெப்ரவரி 18ஆம் திகதி முதல் பெப்ரவரி 25ஆம் திகதி வரை 7 நாட்கள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் பெப்ரவரி 25ஆம் திகதி பி.ப 6.00 மணிக்கு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் குறித்த குழுநிலை விவாதம் பெப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை 4 சனிக்கிழமை நாட்கள் உள்ளடங்கலாக 19 நாட்கள் இடம்பெறவுள்ளன.

இதற்கான வாக்கெடுப்பை மார்ச் 21ஆம் திகதி பி.ப 6.00 மணிக்கு நடத்துவதற்கும் இங்கு இணக்கம் காணப்பட்டது.

வரவு–செலவுத்திட்ட காலப்பகுதியில் மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.00 மணி வரையான நேரம் 5 வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதுடன், மு.ப 10.00 மணி முதல் பி.ப 6.00 மணி வரையான காலப் பகுதியில் வரவுசெலவுத்திட்ட விவாதம் இடம்பெறும். வாக்கெடுப்பு நடத்தப்படும் தினங்களான பெப்ரவரி 25 மற்றும் மார்ச் 21ஆம் திகதிகள் தவிர ஏனைய அனைத்து நாட்களிலும் பி.ப 6.00 மணி முதல் பி.ப 6.30 மணிவரையான காலப்பகுதி சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணைக்காக ஒதுக்கப்பட்டிருக்கும்.

## அதிரடி...

வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதாக பொய்யாக வாக்குறுதி அளித்து மக்களை ஏமாற்றியதாக குற்றம் சாட்டப்பட்ட சக்திவாய்ந்த அரசியல்வாதி, ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சுற்றுலா துறைக்குள் தவறான நடத்தைகளில் ஈடுபட்ட பல தலைவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

கூடுதலாக, குற்றப் புலனாய்வுப் பிரிவு (சிஐடி) மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு ஆகியவை நாட்டின் செல்வத்தை சுரண்டுவதாகக் குற்றம் சாட்டப்பட்ட பத்துக்கும் மேற்பட்ட நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடரத் தயாராகி வருகின்றன.

இந்த வழக்குகளில் போர் விமான பரிவர்த்தனைகள் மற்றும் சர்ச்சைக்குரிய பத்திர பரிவர்த்தனைகளில் முறைகேடுகள் அடங்கும் என அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தின் போது ஒரு முக்கிய அரசியல்வாதியின் மனைவி மீது நடத்தப்பட்ட விசாரணைகள் நடைமுறை குறைபாடுகள் காரணமாக சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டன.

இந்த விசாரணைகள் முறையாக முடிவடைந்தவுடன், அனைத்து சந்தேக நபர்களுக்கும் எதிராக சட்டம் உடனடியாகவும் முறையாகவும் செயல்படுத்தப்படும் என்று மூத்த அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளீன்...

தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மலர்ந்திருக்கும் புதுவருடம் இன ஒற்றுமையுடன் கூடிய இனப்பிரச்சனையை தீர்த்து வைக்கும் அவர்களின் இலக்கை அடையும் புதுவருடமாக அமையும் என்ற எதிர்பார்ப்போடு காலடி எடுத்து வைக்கின்றோம்.

உலக நாடுகள் மற்றும் நாணய நிதியத்திடம் இலங்கை வாங்கிய கடனை மீளசெலுத்துவதற்கான உடனடி வழிமுறை எதுவும் இல்லை. இலங்கையில் வருமானம் தரக்கூடிய பொருளாதாரம் எவையும் இல்லை. சுற்றுலாப்பயணிகளின் வருகையை மட்டும் தான் எதிர்பார்த்திருக்கிறார்கள். நெல் உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள்ளது. கைத்தொழில் துறையும் எதிர்பார்த்த இலாபத்தை அடையவில்லை.

இலங்கை அரசாங்கம் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கும் கிளீன் ஸ்ரீலங்கா போன்று ஒரு கிளீன் திட்டத்தை கொண்டு வருவார்களாக இருந்தால் உலகத் தமிழர்களின் நிதியுடன் வடக்கு கிழக்கில் புதிய அபிவிருத்தியை உருவாக்க தயார். இங்குள்ள பல தொழிற்சாலைகள் இன்னும் இயங்க முடியாம் உள்ளன. இவற்றை இயக்குவதற்கான பண பலத்தை உலகத்தமிழர்கள் கொண்டுள்ளனர்.

எண்பது ஆண்டுகளாகவுள்ள இனப்பிரச்சினைக்கு இதயசுத்தியுடன் இந்த அரசாங்கம் தீர்வுகாணுமாயின் அது ஒரு புதிய மாற்றத்தை இலங்கைக்கு கொண்டுவரும்.சிங்கள மக்கள் இனப்பிரச்சினை விடயத்தில் தற்போதும் பௌத்த இதிகாசங்களுடனேயே சிந்திக்கின்றனர்.

இவற்றிலிருந்து வெளியேறி பொலிஸ், காணி அதிகாரங்களை எமக்கு தந்து, நாங்கள் சுயாட்சியாக வாழ வழிவிடவேண்டும். எங்களுடைய சமாதான கதவுகள் எப்பொழுதும் திறந்திருக்கும் என அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதி தலைமையில் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத்திட்டம் ஆரம்பம்



# போக்குவரத்து விதிமீறல் தொடர்பில் முறைப்பாடு செய்ய புதிய செயலி

## e-Traffic செயலி அறிமுகம்

“கிளீன் ஸ்ரீ லங்கா” திட்டத்துடன் இணைந்து, இலங்கை பொலிஸினால் e-Traffic என்ற கையடக்க தொலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமையகத்தில் வைத்து பதில் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரியவினால் இந்த செயலி நேற்று (01) அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த செயலி மூலம் பொதுமக்கள், போக்குவரத்து விதிமீறல்கள் குறித்து உடனடியாக முறைப்பாடு தெரிவிக்கலாம்.

இலங்கை பொலிஸின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.police.lk ஊடாக E-servicesக்குள் பிரவேசிப்பதன் மூலம் ந-வுசயககஉை கையடக்கத் தொலைபேசி செயலியை உங்கள் கையடக்கத் தொலைபேசியில் இலகுவாகப் பதிவிறக்கம் செய்ய முடியும் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இதன் ஊடாக உங்களது முறைப்பாடுகளை உடனடியாக பொலிஸ் தலைமையகத்திற்கு




அனுப்பி வைக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பொலிஸ் பிரிவுகளையும் உள்ளடக்கிய 607 பொலிஸ் நிலையங்களில் போக்குவரத்து அதிகாரிகள் கடமையாற்றுவதுடன், இந்த e-Traffic கையடக்க தொலைபேசி செயலியை அறிமுகப்படுத்துவதன் மூலம் தினசரி வாகன விபத்துக்களை குறைப்பதற்கு பொதுமக்களின் ஆதரவைப் பெறமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த செயலியில் உள்ள Camera option icon my;yJ Video option iconI பயன்படுத்துவதன் மூலம், போக்குவரத்து விதிமீறல்கள் மற்றும் வீதிகளில் இடம்பெறும் பிற சம்பவங்கள் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை இந்த கணக்கு மூலம் பொலிஸ் தலைமையகத்திற்கு அனுப்ப முடியும். இவ்வாறு வழங்கப்பட்ட தகவல்களின்படி, போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகள் மற்றும் பிற சம்பவங்களை விசாரணை செய்து, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்கள் மற்றும் பொலிஸ் பிரிவுகளுக்கு அனுப்புவதற்கு பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

விசாரணைகளின் முன்னேற்றத்தை பொலிஸ் தலைமையகம் கண்காணிக்கும் என பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# போலி கடவுச்சீட்டுடன் இரு இலங்கையர்கள் கைது!




போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி நேபாளம் ஊடாக இங்கிலாந்து செல்ல முற்பட்ட இலங்கையர்கள் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் (31) கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 39 வயதுடைய மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் நேபாளத்திற்குச் செல்லும் இந்திய விமான சேவையில் பயணிப்பதற்காக நேற்று முன்தினம் விமான நிலையத்திற்கு வந்திருந்தார். குடிவரவு குடியகல்வு கருமபீட அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் அந்நபரின் கடவுச்சீட்டை பரிசோதித்ததில், அவருடைய கடவுச்சீட்டு போலியானது என்றும், இதேபோன்ற அம்சங்களைக் கொண்ட மற்றொரு நபரின் தகவலைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது என்றும் கண்டறிந்தனர். தொடர் விசாரணையை அடுத்து இதனுடன் தொடர்புடைய மற்றொரு நபரும் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

# மொடியூல் பயிற்சியை பூர்த்தி செய்யாதவர்களின் விபரங்களை கோருகிறது கல்வியமைச்சு

**(முகம்மட் முக்தார்)**

நாடளாவிய ரீதியில் இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுகள் கடந்த 03 வருடங்களாக வழங்கப்படவில்லையென கல்வி அமைச்சிற்கு ஆசிரியர் சங்கங்களால் அறிவிக்கப்பட்டதையடுத்து கல்வி அமைச்சு மொடியூல் பயிற்சியை பூர்த்தி செய்யாத ஆசிரியர்களது விபரங்களை கோரியுள்ளது. கல்வி அமைச்சின் தாபன விடயங்களுக்கு பொறுப்பான மேலதிக செயலாளர் அமல் எதிரிசூரிய இது தொடர்பான சுற்றறிக்கையை அனுப்பி வைத்துள்ளார். நாடளாவிய ரீதியிலுள்ள ஆசிரியர் தொழில் வாண்மை விருத்தி நிலையங்கள் ஊடாக ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் வினைத்திறமை தடை காண் பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்றி மொடியூல் பயிற்சியை முடிக்காத ஆசிரியர்களது விபரங்கள் இவ்வாறு கோரப்பட்டுள்ளன. 2022 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ம் திகதிவரை இலங்கை ஆசிரியர் சேவையினருக்கான பதவி உயர்வு வினைத்திறமை தடைகாண் பரீட்சைகள் இன்றி வழங்குவதற்கு அரச சேவைகள் ஆணைக்குழு கல்வி அமைச்சிற்கு அனுமதி வழங்கியிருந்தது.

இத்தினத்திற்கு பின்னர் ஆசிரியர் சேவையினருக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு வினைத்திறமை தடைகாண் பரீட்சையில் சித்தியடைவது கட்டாயமாக்கப்பட்டது. இதன் காரணமாக நாடளாவிய ரீதியில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கான பதவி உயர்வு வழங்கப்படாமல் உள்ளது என ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கல்வியமைச்சின் கவனத்திற்கு கொண்டுவந்தன. தற்போது அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு இது தொடர்பான அறிக்கையொன்றை கல்வியமைச்சு சமர்ப்பித்து பதவி உயர்வு வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்கவுள்ளதாக கல்வி அமைச்சு மேலும் அறிவித்துள்ளது.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 18ஆம் நாள் வியாழக்கிழமை

**மேஷம்** — இன்று உங்களுக்கு சாதகமான நாள்.

**ரிஷபம்** — இன்று திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்** — உடல் நோயில் இருந்து மீண்டு வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

**கடகம்** — இன்று பண வரவு அதிகரிக்கும்.

**சிம்மம்** — இன்று சிறந்த நாள் புத்திசாலித்தனத்தை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

**கன்னி** — இன்று நீங்கள் மிகவும் யதார்த்தமாக இருக்கவேண்டியது அவசியம்.

**துலாம்** — இன்று சற்று அனுகூலம் குறைவான நாள்.

**விருச்சிகம்** — இன்று மிகவும் சிறப்பான நாள்.

**தனுசு** — இன்று அதிக பொறுப்புகளும் பதட்ட நிலைமையும் காணப்படும்.

**மகரம்** — இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

**கும்பம்** — இன்று கவனம் இழக்க வாய்ப்புள்ளது. அதனால் பின் தங்கியிருப்பீர்கள்.

**மீனம்** — நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று அதிகாலை 04:02 வரை துவிதியை பின்பு திரிதியை.
**நட்சத்திரம்:** இன்று அதிகாலை 01:31 வரை உத்திராடம் பின்பு திருவோணம்.
**யோகம்:** சித்த.
**சந்திராஷ்டமம்:** திருவாதிரை,புனர்பூசம்
**சூலம்:** தெற்கு.
**இராகு காலம்:** 01:30 PM முதல் 03:00 PM வரை.
**குளிகை:** 09:00 AM முதல் 10:30 AM வரை.
**எமகண்டம்:** 06:00 AM முதல் 07:30 AM வரை.

# வடக்கில் 3499 வர்த்தகர்களுக்கு அபராதம்




**(கி.வசந்தன்)**

2024 ஆம் ஆண்டு வட மாகாணத்தில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட 3499 வர்த்தகர்களுக்கு எதிராக 02 கோடியே 58 இலட்சத்து 38,500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையின் வடமாகாண உதவிப்பணிப்பாளர் அப்துல் லத்தீவ் ஜக்வார் சாதிக் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று (01) தகவல் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் 3445 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் 3361 வர்த்தகர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வவுனியா மாவட்டத்தில் 744 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் 903 வர்த்தகர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 946 வர்த்தகர்களுக்கு வவுனியா நீதிமன்றத்தின் ஊடாக 57 இலட்சத்து 48 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## அதிகாரத்தை தீர்மானிக்குமா அடிப்படைவாதம்?

இறைவனின் சிருஷ்டிப்பா மனிதன் அல்லது இயற்கையாகப் பிறந்த மனிதன் இறைவனைச் சிருஷ்டித்தானா என்ற விவாதங்கள், மானிடனின் சிந்தனை ஆற்றல்கள் வளர்ந்த காலந்தொட்டு, நிலைத்து வருகிறது. எல்லாவற்றுக்கும் உதாரணம் கூறிவிட்டு "எதனைக் கண்டான் மதம் தனைப் படைத்தான்" என்று பாடல் வரிகளில் கண்ணதாசன் எழுப்பிய கேள்வியால், இன்னும் சிலர் குழப்பத்திலேயே உள்ளனர். இதற்கு காரணம் மதத்தின் பிடியில் சிலதும் மதத்தின் விருப்பில் பலரும் உள்ளதுதான்.

மேலைத்தேய நாடுகளில் ஒரு சிலதைத் தவிர, உலகின் பெரும்பாலான அரசுகளும் இதன் பிடியிலேதான் உள்ளன. அதிலும் ஆசிய, ஆபிரிக்க மற்றும் அரபு நாடுகளில் மதத்தின் பிடிப்பும், விருப்பும் மிக வலுவாகவே உள்ளது.

மதம், அரசியல் மற்றும் பொருளாதாரம் என்பவைதான் இந்த நாடுகளில் ஆட்சியை தீர்மானிக்கின்றன. இந்த நாடுகளின் அரசாங்கங்கள் இந்த மூன்றையும் முன்னிலைப்படுத்தியே ஆட்சியில் நிலைப்பதுமுண்டு.

மதத்தின் இவ்வாறான பிடிப்புக்கள் பல துறைகளுக்குள்ளும் நுழைந்து ஆதிக்கம் செலுத்துவதையே அடிப்படைவாதம் என்கின்றனர். இனம், சமூகம் மற்றும் மொழிகளின் பிடிக்குள் அரசாங்கம் அகப்படும் நிலையை, அடிப்படைவாதமாகப் பார்ப்பது அரிதாகவே உள்ளது.

மதத்தின் பிடியிலான சிந்தனையையே அடிப்படைவாதம் எனப் பலரும் கூறுவதற்கு காரணம்தான் என்ன? உண்மையில், அடிப்படைவாதத்துக்கான வரைவிலக்கணம்தான் என்ன? இவ்விடயத்தில் இவ்வாறான பல கேள்விகள் இன்றளவும் எழுந்தவாறே உள்ளன. ஆனாலும், எந்தப்பிரச்சினையில் இணக்கப்பாடு களை எட்ட முடிந்தாலும் பொதுவாக மத்தின் விடயத்தில் இணக்கப்பாடுகள் எட்டப்படுவதே இல்லை. இதனால்தான், இதற்கு அடிப்படைவாதம் என்கிறார்களோ? தீர்மானிப்பதில் சிக்கல் உள்ளதால், அவரவர் மனச்சாட்சிகளிடம் இவ்வினாவை விட்டுவிடுகிறோம்.

2010 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் முளையிடத் தொடங்கிய இந்த மத வாதம் 2019 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதிவரையும் மிக அருவருப்பான விஷ்வரூபங்களாக வெளிப்பட்டிருந்தன. ஏனைய சமூகத்தவர்களின் மத நம்பிக்கைகள், வழி பாட்டுத்தலங்களைக் கொச்சைப்படுத்தி, இழிவுபடுத்தும் அளவுக்கு நமது நாட்டில் மதம், அடிப்படைவாதமாகியது.

இந்த நிலைமைகள் உச்சத்துக்கு சென்றபோது, அடிப்படை வாதிகளுக்கு ஆசீர்வாதம் வழங்கிய அரசாங்கம் பதவி விலகுமளவுக்கு நிலைமைகள் மாறின.

பசி வந்தால் பத்தும் பறப்பதைப்போல, நமக்குள் ஏற்பட்ட பசி, பட்டினி மற்றும் வறுமை எல்லாம் அடிப்படைவாத ஆட்சியைத் தூக்கி வீசியது. இதுபோலதான், இன்று எமது அயல்நாடான, ஆசிய நாடென்றும் சொல்லலாம், ஆப்கானிஸ்தானில் அடிப்படைவாதத்தின் நெருக்குவாரங்கள் உச்சம் தொடுவதற்குத் தயாராகியுள்ளன.

இஸ்லாத்தின் பாதுகாவலர்களாகத் தங்களைத் தாங்களே சுய மகுடம் சூட்டிக் கொண்ட தலிபான்கள், 2001 இல், ஆப்கானிஸ்தானில் ஆட்சிபீடமேறினர். அன்றிலிரு ந்து இவர்களது அசல் எது? நகல் எது? என்பதைப் புரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் இந்த உலகுக்கு கிடைத்தது. பொதுவாக மேலைத்தேய கலாசாரத்தை எதிர்ப்பது அல்லது விமர்சிப்பதுதான் இஸ்லாத்தின் இலட்சியம் என்ற தோரணையில் தலிபான்களின் போக்குகள், நடவடிக்கைகள் தென்படலாயின. பிரித்தானியர்களின் கல்வித்திட்டத்தை தடை செய்தனர். பெண்களின் வாக்குரிமைகளை இல்லாமலாக்கினர். பெண்கள் வாகனமோட்டுவது, தொழில்புரிவது, பொது இடங்கள் இன்னும் பூங்காங்களுக்குச் செல்வதெல்லாம் தடைக்கு வந்தன. இவைகளெல்லாம், மேலைத்தேய நாடுகளின் அநாச்சாரச் செயற்பாடுகள் என அர்த்தம் வழங்கிய தலிபான்களின் ஆட்சி, இஸ்லாத்திலும் இவை இல்லை என்று வாதிட்டது. மாத்திரமல்ல, சர்வதேசப் புகழ்பெற்ற "பாமியர்ன்ஸ்" பௌத்த சிலைகளும் தகர்க்கப்பட்டு வேறு மதங்களின் நிழல்கள் நிலைக்கக் கூடாதென்று சட்டம் வகுத்தது தலிபான்களின் நிர்வாகம். இஸ்லாத்தின் பிறப்பிடமான சவூதி அரேபியாவில் கூட இல்லாத,

சிந்தனைகளுக்கு வித்திட்ட இவர்களின் ஆட்சியை, வேரோடு பிடுங்கி எறிவதற்கு முன்வந்த சர்வதேசம் 2006 ஆம் ஆண்டு இந்த ஆட்சியைக் கவிழ்த்தது.

கவிழ்க்கப்பட்ட காலந்தொட்டு கங்கணம் கட்டிச் செயற்பட்ட தலிபான்கள், மீண்டும் 2021 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் ஆட்சியேறினர். மதத்தின் பிடியில் மீண்டும் தளைப்போம் என்கின்ற பாணியிலேயே, இவர்களது இப்போதைய ஆட்சி தொடர்கிறது. கடந்த ஆட்சியை விடவும் கடுமையாகியுள்ளன. இவர்களது இப்போதைய சட்டங்கள். வீடுகளுக்கு சாரளம் (ஜன்னல்) வைப்பதைக்கூட அனுமதிப்பதாக இல்லை.வீதியால் பயணிப்போர் வீடுகளுக்குள் உள்ள பெண்களைப் பார்த்து விடுவர் என்பதால்தான், இந்தச் சட்டமாம். இப்போது

"A" என்ற எழுத்தைக்கூட கற்பதற்கு பெண்களுக்கு அனுமதியில்லை. சமயக்கல்விக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பெண்கள் முகத்தை முழுமையாக மூடி இந்த (சமய) கல்வியைக் கற்பதற்கு வசதிகள் செய்யப்பட்டாலும், இதிலுள்ள கட்டுப்பாடுகள் கருதி, இங்கு செல்வதையும் பெண்கள் விரும்புவதாக இல்லை.

பிற நாடுகளின் கலாசாரம்,கல்வியை வெறுக்கும் இவர்களின் அரசாங்கம் இந்த நாடுகளின் உதவியை மாத்திரம் பெறுவது எந்த வகையில் நியாயம்? ஆப்கானின் தெருக்களில் இந்தக் கேள்விகள் இனி, ஒலிக்கத் தொடங்கலாம்? இதற்காகத்தான், அயல் நாடுகளின் உளவுகள், உள் நுழைவதைத் தடுக்கும் திட்டத்தை கச்சிதமாக மேற்கொண்டுள்ளனர் தலிபான்கள். பாகிஸ்தானின் எல்லைகளில் பதற்றத்தை தூண்டுவதற்கென்றே, தலிபான் அரசாங்கம் தாக்குதல்களையும் தொடங்கியுள்ளன. இவர்களின் இப்போதைய போக்குகள் அடிப்படைவாதத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பது எல்லோரையும் சிந்திக்கத் தூண்டியுள்ளது. ஜனவரி 20 இல், அமெரிக்கா வின் புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்கவுள்ள டொனால்ட் ரம்ப் எந்த வியூகத்தில் வெள்ளை மாளிகை நுழைவாரென்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.



## இலங்கையைச் சூழ கடல்: ஆனால் உப்புக்கு தட்டுப்பாடு..

# உப்பு இறக்குமதி செய்யும் அரசு உற்பத்தியை பாதுகாக்குமா?

நாட்டில் 30,000 மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஹம்பாந்தோட்டை லங்கா உப்பு நிறுவனத்தின் புதிய தலைவர் ரீ. நந்தன திலக தெரிவித்துள்ளார்.

தற்போது, உப்புக்கான பற்றாக்குறை நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள நிலையில் அதற்குத் தீர்வாக, உப்பு இறக்குமதி செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தேவையற்ற வகையில் உப்பைச் சேமித்து வைப்பதைத் தவிர்க்குமாறும் அவர் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

உப்பு இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் மன்னார், ஹம்பாந்தோட்டை, புத்தளம் ஆகிய பகுதிகளில் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது.

இந்நிலையில் அதற்குத் தீர்வாகப் பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெட்ரிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய அனுமதி வழங்குமாறு உப்பு உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அதற்கமைய, பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெட்ரிக் தொன் உச்ச அளவுக்கு உட்பட்ட உப்பை ஜனவரி 31ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபத்தின் மூலம் இறக்குமதி செய்து உள்நாட்டு உப்பு உற்பத்தியாளர்கள் ஊடாக சந்தைக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

"உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" அப்படி உணவின் அடி நாதமாக அத்தியாவசியமான பொருட்களில் ஒன்றாக உப்பு உள்ளது.

உப்பு (NaCl) என்பது உணவில் பயன்படும் ஒரு கனிமமும், விலங்குகளின் உடல் நலத்துக்குத் தேவையான ஒரு முக்கியமான பொருளுமாகும். இது சோடியம் குளோரைற் என அழைக்கப்படுகிறது. இதன் வாய்ப்பாடு "NaCl" என வேதியியலில் குறிக்கப்படுகிறது.

கடல் நீரில் உப்பு மிக அதிக அளவில் காணப்படுகிறது. திறந்தவெளி கடலில் உள்ள கடல் நீர் ஒரு லிட்டருக்கு 35 கிராம் உப்பைக் கொண்டுள்ளது. இதன் உவர்ப்புத்தன்மை 3.5 சதவீதம் ஆகும். வேதியியல் உப்புக்கள் சிலவற்றைப் பயிர்களுக்கு உரமாகப் பயன்படுத்துகிறார்கள். ஆனால், சமையல் உப்பு தாவரங்களுக்கு நஞ்சு சார்ந்தது ஆகும்.

எப்படிப் பார்த்தாலும் மனித உணவின் இன்றியமையாத பகுதியாக உப்பு அமைந்துள்ளது. பொதுவாக உப்பு உயிர்வாழ்வதற்கு மிகவும் முக்கியமான ஒரு கனிமம் ஆகும். உப்பு என்பது அடிப்படை மனித சுவைகளில் ஒன்றாகும். விலங்குகளின் திசுக்கள் தாவர திசுக்களை விட அதிகமான உப்பைக் கொண்டுள்ளன. உப்பு என்பது பழமையான மற்றும் எங்கும் நிறைந்த உணவுகளில் ஒன்றாகும்,

"உப்பு" ஒவ்வொரு வீட்டு



சமையலறையிலும் அத்தியாவசிய பொருள் மட்டுமல்ல, மருந்து தயாரிப்புகள், மீன்பிடித் துறையில் முக்கிய பங்களிப்பை வழங்கும் பொருளாகவும் உள்ளது.

இலங்கையின் கடலோரப் பகுதிகளான புத்தளம், ஹம்பாந்தோட்டை, மன்னார், யாழ்ப்பாணம், கிழக்கில் கிண்ணியா ஆகிய இடங்களில் அமைந்துள்ள உப்பளங்கள் நாட்டின் பழமையான உற்பத்தி பாரம்பரியத்தின் சின்னமாக இருக்கின்றன.

இவை நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிப்பதுடன் கரையோர சமுதாய மக்களின் வாழ்வாதாரத்துக்கும் அடிப்படையாக அமைந்திருக்கின்றன.

இந்த இடங்களில் கடல் நீர் உப்பள வயல்களில் சேகரிக்கப்பட்டு சூரிய ஒளியில் ஆவியாக செய்யப்படுகின்றது. இவற்றின் மூலம் உருவாகும் உப்பை சேகரித்து கழுவி உலர்த்தி பாவனைக்கு எடுக்கப்படுகிறது.

இலங்கையைச் சுற்றி நான்கு பக்கமும் கடல் வளத்தை கொண்ட எங்களுடைய நாட்டில் உப்புக்கான கேள்வி தற்பொழுது எழுந்திருப்பது அவதானம் செலுத்த வேண்டிய ஒன்றாக இருக்கின்றது.

புத்தளம், ஹம்பாந்தோட்டை, மன்னார் கிண்ணியா போன்ற இடங்களில் பெரிய அளவிலான உப்பளங்கள் மூலம் இலங்கை நீண்ட காலமாக தன்னிறைவுடன் உப்பு உற்பத்தி செய்து வந்தது.

இருப்பினும், சமீபத்திய காலநிலை மாற்றத்தினால் ஏற்பட்ட பெருமழை வெள்ளம் உப்பு உற்பத்தி செயல்முறையிலுள்ள பலவீனங்களை வெளிப்படுத்தியுள்ளது. ஆகவே நமது உப்பு உற்பத்தி, விநியோகம் ஆகியவற்றை உறுதி செய்ய என்ன செய்யலாம் என்பதை துறைசார்ந்தவர்கள் ஆராய்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

இந்தியா, அவுஸ்திரேலியா, சீனா போன்ற நாடுகள் மோசமான காலநிலை மாற்றங்களுக்கு மத்தியில் தங்கள் உப்பு உற்பத்தித் தொழில்துறையைப் பாதுகாக்க பல முன்னேற்றங்களைச் செய்துள்ளன.

காலநிலை எதிர்ப்புத் திறனுடைய வெள்ளத்தைத் தடுக்க தகுந்த உயரமான உப்பளங்களையும் சேமிப்பு மையங்களையும் அமைத்துள்ளன.

இந்தியாவில் உப்பளங்கள் உள்ள பகுதிகளில் தண்ணீர் தேங்கி நிற்காமல் இருக்க கால்வாய்களையும் உயரடுக்கு மேடைகளையும் அமைத்துள்ளார்கள்.

இதைப் போன்று நமது உப்பளப் பிரதேசங்களுக்கும் தோதான, பொருத்தமான, கட்டுமான தொழினுட்பங்களை மேற்கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் உப்பு தட்டுப்பாடுகளை சமாளிக்க தேசிய அளவில் உப்புக் களஞ்சியங்களை உருவாக்கல் அவசியமானதாகும்.

உப்பு விநியோகத் தடை ஏற்படும்போது பொருளாதாரத்தை நிலைநிறுத்த தேசிய அளவிலான உப்புக் களஞ்சியங்களை வைத்திருப்பது அத்தியாவசியமான ஒன்றாக இருக்கின்றது.

தானியங்கி உப்பு சேகரிப்பு போன்ற தொழில்நுட்ப முன்னேற்றங்களும் உப்பு உற்பத்தியை திறன்பட செயல்பட ஏதுவாக அமையும்.

உப்பு உற்பத்தியாளர்களுக்கு தொழில்நுட்ப உதவி, நிதியுதவி, பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் உள்ளூர் உப்பு உற்பத்தியை ஊக்குவிப்பதும் அவசியமானதொன்றாக இருக்கின்து.

தொடர்ச்சி.. 10 ஆம் பக்கம்



அகல்யா டேவிட்



# வட மாகாண சபை இல்லாமலிருப்பது நன்மையே

## துணைவேந்தர் சிறிசற்குணராஜா கருத்து



(பு.கஜிந்தன்)

வடக்கு மாகாண சபை இல்லாமல் இருப்பது சிறப்புபோல் இருக்கின்றது. மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் சும்மா கத்திக்கொண்டிருப்பதைப்போல மாகாணசபை இருந்தாலும் அங்கும் கத்திக்கொண்டுதான் இருப்பார்கள். இப்போது அதிகாரிகளால் மாகாண சபை சிறப்பாக நடத்தப்படுகின்றது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா தெரிவித்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று பல்கலைக்கழக மாணவர்களுக்கு வடக்கு மாகாண சபையால் நிதியுதவி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் 1984ஆம் ஆண்டு காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படித்தவர். அவர் படித்த காலம் மிக நெருக்கடியானது. அதைப்போலத்தான் அவர் பணிக்குச் சேர்ந்த 1991ஆம் ஆண்டு காலமும் நெருக்கடியானது. அவர்கள் நெருப்பாற்றை நீந்திக் கடந்துதான் பணியாற்றினார்கள்.

வடக்கு மாகாணத்தில் உள்ள அதிகாரிகள் கடமையுணர்வுமிக்கவர்கள். வடக்கு மாகாணத்தின் பலமே அவர்கள்தான். இப்போதுதான் வடக்கின் ஆளுநரைக்கூட யாழ்ப்பாணத்திலிருந்து கண்டுபிடித்திருக்கின்றார்கள். அரசியல்வாதிகளையும் கொழும்பிலிருந்து கொண்டுவரும் ஒரு காலம் இருந்தது. எங்களால் செய்ய முடியாது என்ற எண்ணம் இனியாவது மாற்றப்படவேண்டும்.

வடக்கு மாகாண ஆளுநராக வேதநாயகனை இந்த அரசாங்கம் தேர்ந்தெடுத்தன் ஊடாக வடக்கு மாகாணத்தில் அரசாங்கத்தின், தேசிய மக்கள் சக்தியின் செல்வாக்கு ஒரு படி மேலோங்கி விட்டது. வடக்கு ஆளுநரும் அவரது அணியும் இந்த மாகாணத்தில் சிறப்பாக வேலை செய்கின்றார்கள். அவர்களை அப்படியே சேவை செய்யவிட்டால் போதும் என நினைக்கின்றேன். மாகாண சபை இல்லாமல் இருப்பது நல்லம்தான். இல்லாவிடின் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் சத்தம் போட்டுக் கொண்டிருப்பதைப்போல அங்கும் சத்தம்தான் போட்டுக் கொண்டிருப்பார்கள். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் “மாஸ்ரர் பிளான்“ இருக்கா என்று கேட்பார்கள். ஆனால் இந்த அதிகாரிகள்தான் இங்கிருந்து எல்லாவற்றையும் செய்துகொண்டிருக்கின்றார்கள், என்றார்.

# வவுனியா ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள்





(கி.வசந்தன்)

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு வவுனியா இந்து ஆலயங்களில் நேற்று (01) காலை விசேட வழிபாடுகள் நடைபெற்றன.வவுனியா கந்தசாமி ஆலயம் மற்றும் வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலயங்களில் விசேட அபிஷேக பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதுடன், அடியவர்கள் நெய் எண்ணை ஏற்றி வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

# மன்னாரில் கன மழையிலும் நள்ளிரவு ஆராதனை





(வாஸ் கூஞ்ஞ)

புதுவருடம் மலர்ந்த இரவு வேளையில் மன்னார் பகுதியில் பல இடங்களில் கன மழை பெய்தபோதும் கத்தோலிக்க மக்கள் புதுவருட இரவு ஆராதனையில் கலந்து கொண்டனர். 2025 ஆம் ஆண்டுக்கான புதுவருட மலர்வை முன்னிட்டு மன்னார் மறைமாவட்டத்தின் ஐம்பது பங்குகளில் மன்னார் பேராலயம் உட்பட அதிகமான பங்குகளில் இரவுத் திருப்பலிகள் நடைபெற்றன. மன்னார் மறைமாவட்டத்தில் முதுமை பங்காகவும் கத்தோலிக்க மக்கள் செறிந்து வாழும் பங்கான பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயத்தில் புதுவருட இரவு ஆராதனை பங்குத் தந்தை அருட்பணி சத்தியராஜ் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது.

# கிளாலியில் இலவச மருத்துவ முகாம்

(பு.கஜிந்தன்)




பளை – பச்சிலைப்பள்ளி மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, நாடாளுமன்ற உறுப்பினரான ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தியின் ஒழுங்குபடுத்தலில் கிளாலி பகுதி மக்களுக்கு நேற்று முன்தினம் (31) இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வினோதனின் நேரடி வழிப்படுத்தலிலே இந்த இலவச மருத்துவ சிகிச்சை முகாம் செயற்படுத்தப்பட்டது. இந்த மருத்துவ முகாமில் பல மக்கள் மருத்துவ சேவையை பெற்றுக்கொண்டதை அவதானிக்க முடிந்தது. அத்துடன் இவ்வாறான தொடர்ச்சியான மருத்துவ முகாம்களை நடாத்துவதற்கு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சம்மதம் தெரிவித்துள்ளார்.

# புத்தாண்டு பணி ஆரம்ப நிகழ்வுகள்

2025 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் முதல் நாள் பணி ஆரம்பிக்கும் நிகழ்வு வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து அரச அலுவலங்களிலும் நடைபெற்றன. நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, உத்தியோகத்தர்கள் அனைவரும் ‘தூய்மையான இலங்கை’ (Clean Sri Lanka) திட்டத்துடன் இணைக்கப்பட்ட உறுதி மொழியை எடுத்துக் கொண்டனர்.

## யாழ்ப்பாணம்





(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் 2025 ம் ஆண்டுக்கான புதிய வேலை ஆரம்பநாளின் மாவட்ட செயலக முன்றலில் தேசிய கொடியினை பதில் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் ஏற்றிவைத்தார்.

## மன்னார்





(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக காலை 8.30 மணிக்கு மாவட்ட அரசாங்க அதிபர் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்ட பின்னர், தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, உத்தியோகத்தர்கள் அனைவரும் ‘தூய்மையான இலங்கை’ (Clean Sri Lanka) திட்டத்துடன் இணைக்கப்பட்ட உறுதி மொழியை எடுத்துக் கொண்டனர்.

## கிளிநொச்சி





(ஜதுர்சிகா)

புத்தாண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. அந்தவகையில், அரச சேவை சத்தியப்பிரமாண நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரனின் தலைமையில் நடைபெற்றது.

## பருத்தித்துறை





(பு.கஜிந்தன்)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் புதுவருட கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

# பதவியேற்கவுள்ள ட்ரம்பின் அதிரடி அறிவிப்புகள்

## பனாமா கால்வாயும் கிறீன்லாந்தும் எங்களுக்கு வேண்டும்!



- அருள் சத்தியநாதன்





"ரொனால்ட் ரேகனைப் போல வலிமையான அமெரிக்கா, அமெரிக்க நலன்களுக்கு மட்டுமே முக்கியத்துவம், சீனாவும் ரஷ்யாவும் எங்கள் பிராந்தியத்துக்குள்ளேயே வரக் கூடாது என்பதை வலியுறுத்துவதாகவே ட்ரம்பின் இந்த அறிவிப்புகள் உணர்த்துவதாகத் தெரிகிறது.

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாகவும், நான்கு வருட இடைவெளியில் இரண்டாவது தடவையாக தேர்தலில் வெற்றி பெற்ற இரண்டாவது அமெரிக்க ஜனாதிபதியாகவும் விளங்கும் டொனால்ட் ஜோன் ட்ரம்ப், அதிரடி அறிவிப்புகளுக்கும், செயல்கள், தீர்மானங்களுக்கும் பெயர்போனவர். அவருக்கு வயது 78. தன் பதவிக் காலத்தை நிறைவு செய்யும் போது அவருக்கு 82 வயதாகியிருக்கும். வயதான நிலையில் பதவி வகிக்கும் முதல் ஜனாதிபதியாக ட்ரம்ப் கருதப்படுகிறார். வயதானவராக இருந்தாலும், உலகின் பலம் பொருந்திய பதவியை வகிக்க அவரே தகுதியானவர் என அமெரிக்காவின் நடுத்தர மற்றும் இளைய தலைமுறையினர் தீர்மானித்தனர் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

ஜோ பைடன் பதவியேற்றபோது அவருக்கு 78 வயது. இப்போது 82. ட்ரம்பும் இதே வயதில்தான் ஓய்வு பெறப் போகிறார். 1946 ஜூன் 14ஆம் திகதி செல்வந்த குடும்பத்தின் ஐந்து பிள்ளைகளின் நான்காவதாக பிறந்தவரே டொனால்ட் ட்ரம்ப். சொந்த ஊர் நியூயோர்க். இவரது தந்தை ஃபிரட்ரிக் கிறிஸ்ட் ட்ரம்ப், காணி, வீடு வாங்கி விற்கும் தொழில் செய்பவர். டொனால்ட் ட்ரம்ப், பென்சல்வேனியா பல்கலைக்கழகத்தில் பொருளாதார பட்டதாரியாக படிப்பை முடித்தவர். அப்பாவின் தொழிலை செய்யத் தொடங்கிய ட்ரம்ப், இரவு கிளப் சூதாட்ட விடுதிகள், உல்லாச ஹோட்டல்கள் என 500 நிறுவனங்களை தனக்குக் கீழ் வைத்து நடத்தும் கோடீஸ்வர வர்த்தகர். அவரது மொத்த வர்த்தக பெறுமதி 900 பில்லியன் டொலர்களாக இருக்கக் கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மிஸ் யுனிவர்ஸ், மிஸ் யூ.எஸ்.ஏ., மிஸ் டீன் யூ.எஸ்.ஏ ஆகிய உலகப் பிரசித்த போட்டிகளை நடத்தும் மிஸ் யுனிவர்ஸ் ஓர்கனைசேஷன் என்ற நிறுவனம் ட்ரம்புடையதுதான்.

ஆர்ப்பாட்டமான வாழ்க்கை முறையைக் கொண்ட ட்ரம்ப், தன் மூன்று திருமணங்களின் மூலம் ஐந்து பிள்ளைகளின் தந்தை.

1977ஆம் ஆண்டு செக் நாட்டு மொடல் அழகியான இவானா மாரி என்பவரைத் திருமணம் செய்த ட்ரம்ப், மூன்று பிள்ளைகளின் தந்தையான பின்னர் 1992 இல் அவரை விவாகரத்து செய்தார். அவர் மார்லா மேப்ளஸ் என்பவரை 1993இல் திருமணம் செய்தார். இவருக்கும் ஒரு குழந்தை பிறந்தது. 1999இல் இரண்டாம் மனைவியை விவாகரத்து செய்தார். 2005ஆம் ஆண்டு ஸ்லோவாக்கிய மொடல் அழகியான மெலனியாவைத் திருமணம் செய்தார். இவர் மூலமாக அவருக்கு ஒரு பிள்ளை உள்ளது. மொத்தம் மூன்று மகள்மார். இரண்டு மகள்கள்.

வலிமை மிக்க அமெரிக்காதான் அவரது அரசியல் அடிநாதம். தீவிர வலதுசாரி. ஜிம்மி கார்டரின் காலத்தில் அமெரிக்காவின் வலிமை குன்றிவிட்டதாக ஒரு தோற்றம் ஏற்பட்டிருந்தது. அவர் காலத்தில் தான் ஷாமன்னர் ஈரானில் இருந்து விரட்டியடிக்கப்பட்டு, அயதுல்லா கொமினி ஆட்சியை கைப்பற்றினார். ஈரானின் புரட்சிக் காவலர்கள் தெஹ்ரானின் அமெரிக்கத் தூதரகத்தைக் கைப்பற்றி தூதுவரையும் அதிகாரிகளையும் சிறை வைத்தனர். அவர்களை மீட்பதற்காக விசேட கொமாண்டோ அணி ஈரானிய பாலைவனத்தில் இறக்கப்பட்ட போது பல அமெரிக்க வீரர்கள் விமான விபத்தில் சிக்கி மாண்டனர். மீட்பு திட்டம் படுதோல்வி அடைந்தது. ஆனால் ரொனால்ட் ரேகன், வலிமையான அமெரிக்காவை மீண்டும் உருவாக்குவேன் என்ற கோஷத்தை முன்வைத்து ஜிம்மி கார்ட்டரை தோற்கடித்து பதவிக்கு வந்தார்.

ஜேம்ஸ் ஏர்ள் கார்டர் என்ற பெயர் கொண்ட ஜிம்மி, அமெரிக்காவின் 39ஆவது ஜனாதிபதியாக 1977 முதல் 1981 வரை பதவி வகித்த, மென்போக்குக் கொண்டவர். நூறு வயதுவரை வாழ்ந்த ஒரே முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியாகத் திகழ்ந்தவர் இவர் மட்டுமே.

அமெரிக்காவுக்காக ஊக்கமுடன் செயற்படக் கூடிய ஜனாதிபதியாக ஜோ பைடன் இல்லை என்பது தான் டொனால்ட் ட்ரம்ப் தன் தேர்தல் பிரசாரத்தின்போது முன்வைத்த பிரதான விஷயம். இதை கமலா ஹரீசினால் முற்றாகத் தகர்க்க முடியவில்லை. ஏனெனில் பைடனின் அரசில் உப ஜனாதிபதியாக பதவி வகித்தவர்தானே கமலா! எனவே, பலவீனமானவர் என்பதை கோஷமாக முன்வைத்து ஜிம்மி கார்டரைத் தோற்கடித்து ரேகன் பதவிக்கு வந்ததைப் போலவேதான் ட்ரம்பும் அதே உத்தியைப் பயன்படுத்தியுள்ளார்.

எதிர்வரும் 20ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள ட்ரம்ப், அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார். இவை அதிர்ச்சியையும் வியப்பையும் ஏற்படுத்துவனவாக உள்ளன. கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாநிலமாக்குவோம், கிறீன்லாந்தை விலை கொடுத்து வாங்குவோம், பனாமா கால்வாய் எங்களிடம் திருப்பித் தரவேண்டும் என்ற அறிவிப்புகள், முன்னெப்பொழுதும் எந்தவொரு அமெரிக்க ஜனாதிபதியாலும் முன்வைக்கப்படாதவை.

கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை சந்தித்த பின்னர் கனடாக அமெரிக்காவின் 51ஆவது மாநிலமாக இருந்தால் நன்றாக இருக்கும் என்றொரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

அவரது சீண்டல் கனடிய மக்களால் தீவிரமாகப் பார்க்கப்படவில்லை என்பது ஆறுதலான விடயம். கனடா என்றைக்குமே முழு இறைமை கொண்ட தனிநாடு தான் என்பதில் மக்களுக்கு எந்தச் சந்தேகமும் இல்லை என்பதை அவர்களது அமைதி எடுத்துக் காட்டுகிறது என்று கருதலாம்.

அதன் பின்னர், பனாமா கால்வாய் மீண்டும் அமெரிக்கா வசம் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அவர் முன் வைத்துள்ளார். தென்னமெரிக்க நாடான பனாமாவில் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு கால்வாய் வெட்டப்பட்டது. இது 82 கி.மீ. நீளம் கொண்டது. பனாமா, ஸ்பானியரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத்திலேயே பசுபிக் மற்றும் அட்லாண்டிக் சமுத்திரங்களை இணைக்க ஒரு கால்வாய் அவசியம் என உணரப்பட்டிருந்தது. பின்னர் பிரெஞ்சு ஆட்சிக் காலத்தில் இத்திட்டம் தொடக்கி வைக்கப்பட்டு, மஞ்சள் காய்ச்சல் மற்றும் மலேரியா காரணமாக கைவிடப்பட்டது. அப்போது அமெரிக்கா அத் திட்டத்தை எடுத்துக் கொண்டு 1904ஆம் ஆண்டு பனாமா திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 1914ஆம் ஆண்டு பாசல்வாய் பூர்த்தியானது. 1914 ஆகஸ்ட் 15ஆம் திகதி வர்த்தக ரீதியாக செயல்பட ஆரம்பித்தது. வருடமொன்றுக்கு பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட கப்பல்கள் இக் கால்வாயை பயன்படுத்தி வருவதோடு வருமானமாக ஆண்டொன்றில் இரண்டு பில்லியன் டொலர் ஈட்டப்படுகிறது. அமெரிக்காவிடம் இருந்த பனாமா கால்வாய் உரிமையை ஜிம்மி கார்டர் 1977ஆம் ஆண்டு ஒரு ஒப்பந்தத்தின் வாயிலாக பனாமாவிடம் கையளித்தார். 1999ஆம் ஆண்டு இக் கால்வாய் உரிமை முழுமையாக பனாமா நாட்டிடம் சென்றது.

தம்மிடமிருந்த ஒரு வளத்தையும் அதிகாரத்தையும் அநியாயமாக ஜிம்மி கார்டர் பனாமாவிடம் தாரை வார்த்து விட்டார் என்பதால் அதை மீண்டும் பெற வேண்டும் என்பது ட்ரம்பின் வாதம். அமெரிக்கா 375 மில்லியன் டொலர் செலவில் கால்வாயை அமைத்ததாகவும் 36 ஆயிரம் அமெரிக்கர்கள் திட்டப் பணிகள் நடைபெற்றபோது உயிரிழந்ததாகவும் தெரிவித்திருக்கும் டொனால்ட் ட்ரம்ப், அத்தியாகம் வீணாகிப் போய்விடக் கூடாது என்கிறார். பனாமாவை அமெரிக்க ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வராவிட்டால் அங்கே சீன மற்றும் ரஷ்ய செல்வாக்கு அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உருவாகும் எனவும் அது அமெரிக்க நலன்களுக்கும் பாதுகாப்புக்கும் பாதகமாகிவிட முடியும் என்றும் ட்ரம்ப் தன் பக்க நியாயங்களைச் சொல்கிறார். பசுபிக் கடலில் இருந்து அட்லாண்டிக்குக்கு தன் போர்க் கப்பல்களை அனுப்பவும் திரும்பி வரவும் பனாமா கால்வாய் தம்வசம் இருக்க வேண்டும் எனக் குறிப்பிடும் அவர் பனாமா அமெரிக்காவுக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது எனக் கருதுகிறார்.

ஆனால் ட்ரம்பின் இந்த யோசனையை பனாமா முற்றிலுமாக நிராகரித்துவிட்டது. அதன் ஜனாதிபதி, கால்வாயை மீண்டும் கையளிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறி விட்டாலும் ட்ரம்ப் பதவியேற்றதும் பனாமாவுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்துவதன் மூலம் பனாமாவை பணியவைக்கவும் அல்லது ஏதேனும் ஒரு அமெரிக்க சார்ப்பு நிலைப்பாட்டுக்கு பனாமாவைக் கொண்டுவரவும் ட்ரம்ப் முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

ட்ரம்ப் அறிவித்திருக்கும் மூன்றாவது யோசனை, உலகிலேயே பெரிய தீவாகக் கருதப்படும் கிறீன்லாந்தை அமெரிக்கா வாங்க விரும்புகிறது என்பதாகும். துருவத்துக்குப் கனடிய எல்லைக்கும் அண்மித்ததாக அமைந்திருக்கும் இப் பெரிய தீவு, வடக்கு, தெற்காக 1,660 மைல் நீளம் கொண்டது. இத்தீவின் மூன்றில் இரண்டு பங்கு பாரிய பனிக் கட்டிகளாலும் பனி மலைகளாலும் மூடப்பட்டுள்ளது. கரையோரப் பகுதிகளிலேயே மக்கள் வசிக்கின்றனர். இத்தீவு டென்மார்க்கின் கட்டுப்பாட்டில் சுதந்திரமாக இயங்கி வருகிறது. 56 ஆயிரம் பேர் இத்தீவில் வசிக்கின்றனர். இரண்டாம் உலகப்போரின் போது இத்தீவை தன்வசம் வைத்திருந்த அமெரிக்கா, 1945இல் டென்மார்க்கிடம் மீண்டும் கையளித்துவிட்டது.

ஆனால் அத்தீவின் இரு பெரும் அரசியல் கட்சிகளும் டென்மார்க் கட்டுப்பாட்டில் இருந்து முழுமையாக விடுபடுவதே தமது நோக்கம் என்றும் இத்தீவு விற்பனைக்கு இருப்பதாகத் தாம் கருதவில்லை என்றும் தெரிவித்துள்ளன.

தற்போது டென்மார்க் கட்டுப்பாட்டில் உள்ள கிறீன்லாந்து சுதந்திரம் பெற்று தனிநாடானால் வேறு நாடுகளின் செல்வாக்குக்கு அது இலக்காகலாம். குறிப்பாக சீனாவின் அல்லது ரஷ்யாவின் செல்வாக்குக்கு உள்ளாகி, அதன் பொருளாதாரத்திலும் அவை செல்வாக்கு செலுத்துமானால், அது அமெரிக்க நலன்களுக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமையும் என ட்ரம்ப் கருதலாம் என்பதை யூகிக்க முடிகிறது. அதனால், எண்ணெய், எரிவாயு, அரிய கனிம வளங்கள் மற்றும் யுரேனியம் என்பன கிடைக்கக் கூடிய மற்றும் இராணுவ ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த கிறீன்லாந்தை அமெரிக்காவின் சொத்தாக மாற்றிக் கொண்டால் பிரச்சினை தீர்ந்துவிடும் என ட்ரம்ப் நம்புகிறார்.

முன்னர் அறுபதுகளில் அமெரிக்காவை அண்மித்த கியூபாவில் ரஷ்யா ஏவுகணைத் தளங்களை அமைக்க முற்பட்டபோது அன்றைய ஜனாதிபதி ஜோன் கென்னடி ரஷ்யாவுடன் கடுமையாக முரண்பட்டு அதைத் தடுத்து நிறுத்தினார். தனது பிராந்தியத்தில் ரஷ்யாவோ அல்லது சீனாவோ செல்வாக்கு செலுத்துவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்ற அமெரிக்க நிலைப்பாட்டையே ட்ரம்ப் தனது பாணியில் மீளவும் உறுதிப்படுத்தியுள்ளார்.

ட்ரம்பின் இந்தக் கருத்துகளுக்கு டென்மார்க் அரசு எதிர்விளையாற்றவில்லை. கிறீன்லாந்தின் மொத்த கடற்கரையையும் கண்காணித்து பாதுகாக்கும் திறன் அதனிடம் இல்லை என்பதோடு வான் பாதுகாப்பையும் உறுதி செய்ய முடியாதுள்ளது. எனவே அமெரிக்காவிடம் கிறீன்லாந்து செல்லுமானால் அல்லது அமெரிக்கக் கட்டுப்பாட்டுக்குள் வருமானால் தலைவலி விட்டது என ஒதுங்கிக் கொள்ளலாம் என டென்மார்க் கருதுவதற்கு இடமுண்டு.

# நாடாளுமன்றத்தில் ‘கிளீன் ஸ்ரீலங்கா திட்டம்’ முன்மொழிவு








## உக்கிரமடைந்துள்ள சிவப்பு அரிசி தட்டுப்பாடு

(கனூஷியா புஷ்பகுமார்)

நாட்டில் சிவப்பு பச்சை அரிசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு தீவிரமடைந்துள்ளது. நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள சிவப்பு பச்சை அரிசித் தட்டுப்பாடு காரணமாக, பல மாவட்டங்களில் நெல் களஞ்சியசாலை மற்றும் அரிசி ஆலைகளை சோதனையிட நுகர்வோர் அதிகார சபை தீர்மானித்துள்ளது.



அம்பாந்தோட்டை, எம்பிலிப்பிட்டிய, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் நெல் களஞ்சியசாலைகள் மற்றும் அரிசி ஆலைகளில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரகோன் கூறியுள்ளார். மேலும், தேவைப்படின் பாதுகாப்புப் படையினரின் ஆதரவும் பெற்றுக்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## 2024ஆம் ஆண்டில் 350 யானைகள் பலி

(எம்.ரீ.ஆரிப்)

2024ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் 350 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் காட்டு யானைகளின் உயிரிழப்பு அதிகரித்துள்ளதாக திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதிகளவான காட்டு யானைகள் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதுடன்.அவற்றின் மொத்த எண்ணிக்கை 70 ஆகும்.



அத்துடன் மின்சாரம் தாக்கி 50 காட்டு யானைகளும் யானை வெடி வெடித்து 35 காட்டு யானைகளும் ரயிலில் மோதி 10 காட்டு யானைகளும் உயிரிழந்துள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்னை பயிர்ச்செய்கை சபையில் பொங்கலிட்டு பணிகள் ஆரம்பம்




(க.மகாதேவன்)

மாரவில பகுதியில் அமைந்துள்ள தென்னை பயிர்ச்செய்கை சபை காரியாலயத்தில் 2025 ஆண்டுக்கான புதுவருட நிகழ்வுகள் நேற்று புதன்கிழமை பால் பொங்கலிட்டு ஆரம்பிக்கப்பட்டன.

இந்த நிகழ்வு பிராந்திய முகாமையாளர் தலைமையில் இடம்பெற்றது.இதில் சகல அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

## தமிழ் மொழி மூல அறிவுப் போட்டியில் அம்னா இரண்டாமிடம்

(எம்.ரீ.ஆரிப் )

வடமத்திய மாகாண கலாசார திணைக்களத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் கலை நிகழ்ச்சியில் தமிழ் மொழி மூல அறிவுப் போட்டியில் ஏ.ஆர்.எப்.அம்னா இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார்.



இம்முறையும் 34 ஆவது தடவையாக கொரக்கஹவெவ மாகாண அபிவிருத்தி மற்றும் பயிற்சி பிரிவு கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வை முன்னிட்டு நடாத்தப்பட்ட தமிழ் மொழி மூல அறிவுப் போட்டியில் அநுராதபுரம் சாஹிரா கல்லூரி யில் தரம் 9ரி பிரிவில் கல்வி பயிலும் ஏ.ஆர்.எப்.அம்னா இரண்டாம் இடத்தை பெற்றுள்ளதாக அதிபர் ஜே.ஏ. அசாத் மொஹமட் தெரிவித்தார்.

## கல்பிட்டி அல் அக்ஸாவில் பரிசளிப்பு விழா



(அரபாத் பஹுர்தீன்)

கல்பிட்டி விஞ்ஞான செயல்திட்டத்தின் இரண்டாவது வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும், முதலாவது பிரியாவிடை நிகழ்வும் நடைபெற்றது. (30) கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் தம்பி நெய்னா மரிக்கார் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றிருந்தது.

கல்பிட்டி பிரதேச மாணவர்களின் இலட்சியக் கனவான வைத்தியர் மற்றும் பொறியியலாளர் என்ற கனவுகளை நனவாக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட கல்பிட்டி விஞ்ஞான செயல்திட்டத்தின் முதல் வருட மாணவ, மாணவியர் நடந்து முடிந்த உயர்தரப்பரீட்சையில் தோற்றியிருந்தார்கள்.

இவ்வாறு பரீட்சைக்குத் தோற்றிய மாணவ, மாணவிகளுக்கான பிரியாவிடை நிகழ்வும், எதிர்வரும் 2025ஆம் ஆண்டு உயர்தரம் எழுதக் காத்திருக்கும் மாணவ, மாணவிகளுக்கான தவணைப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட மாணவ, மாணவிகளுக்குமான பரிசளிப்பு நிகழ்வும் இச்செயற்திட்டத்தின் தலைவரும், கல்பிட்டி கோட்டக்கல்வி காரியாலயத்தின் விஞ்ஞானப்பாட ஆசிரிய ஆலோசகருமான எம்.ஜி.எம். ஹிஸான் தலைமையில் இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வின் முதல் அங்கமாக கல்பிட்டி விஞ்ஞான செயல்திட்டத்தின் ஆசிரியர்களின் உரை மற்றும் தவணைப் பரீட்சைகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு மற்றும் இச்செயல்திட்டம் கடந்து வந்த பாதை தொடர்பான காணொளி, எதிர்கால செயல்திட்டங்கள் தொடர்பான விளக்கங்கள் என்பன இடம்பெற்றிருந்தன.

## மாத்தறை மாவட்ட செயலகத்தின் பணிகள் ஆரம்பம்




(வெலிகம நிருபர்)

2025ம் ஆண்டு புத்தாண்டு மலர்ந்ததையடுத்து அரசாங்கத்தின் clean srinlanka தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் மாத்தறை மாவட்ட செயலகத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மாவட்ட செயலாளர் கனேஷ அமரசிங்க தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வு , சர்வமத தலைவர்களின் சமய நிகழ்ச்சிகளுடன் ஆரம்பமாகின. தொடர்ந்து தேசிய கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

மாத்தறை மாவட்டத்திலே 8 இலட்சத்துக்கு மேற்பட்டவர்களுக்கு சேவை செய்வதற்காக நிர்மாணிக்கப்பட்ட மாத்தறை மாவட்ட செயலகம் உட்பட மாவட்டத்தில் அமைந்துள்ள சகல அரச நிறுவனங்களிலும் இவ்வாறான நிகழ்வுகள் இடம் பெற்றன . இதில் மாவட்ட செயலக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## ரஜப் மாதத்திற்கான தலைப்பிறை மாநாடு

ஹிஜ்ரி 1446 (இஸ்லாமிய வருடம்) ரஜப் மாதத்திற்கான தலைப்பிறை பார்க்கும் மாநாடு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

இதன்போது நாட்டின் எப்பாகத்திலும் தலைப் பிறை தென்படாததால் இலங்கை வாழ் மக்கள் புனித ஜுமாதுல் ஆகிரஹ் மாதத்தை நேற்று புதன்கிழமை 01ஆம் திகதி 30ஆக பூர்த்தி செய்து மஹ்ரிபு தொழுகையுடன் புனித ரஜப் மாதம் ஆரம்பமாகின்றது என கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறைக் குழுவின் பிரதித் தலைவர் மௌலவி அல் மஹ்தூமி ஏ.எல். எம்.ரிழா (அல் ஹஸனி) உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

கொழும்பு பெரிய பள்ளிவாசலின் ஏற்பாட்டில் அதன் தலைவர் தாஹிர் ரஷீன் தலைமையில் இடம்பெற்ற மாநாட்டில் பெரிய பள்ளிவாவசலின் பிறைக் குழு உறுப்பினர்கள், அகில இலங்கை ஜமிய்யதுல் உலமா சபையின் தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகள், கொழும்பு பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கையாளர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரிகள், வளிமண்டவியல் திணைக்கள அதிகாரி, ஸ்ரீ லங்கா ஷ ரீஆ கவுன்சில் பிரதிநிதிகள், ஏனைய பள்ளிவாசல்கள், தரீக்காக்கள், ஸாவியாக்ளின் பிரதிநிதிகள் மேமன் சங்க பிரதி நிதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது புனித மிஹ்ராஜ் இரவை எதிர் வரும் ஜனவரி 27ஆம் திகதி மாலை செவ்வாய் இரவு அனுஷ்டிப்பது என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கில் புத்தாண்டு கடமைகள் உறுதிப்பிரமாணத்துடன் நேற்று ஆரம்பம்

**முகம்மட் முக்தார்**

கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துதல் தொடர்பான வாக்குறுதி மற்றும் உறுதிப் பிரமாணத்துடனும் கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல அரச அலுவலகங்களிலும் புத்தாண்டு தினத்தில் அரச அலுவலர்களால் கடமைகள் ஆரம்பிக்கப்பட்டன.

கிழக்கு மாகாண சபை அலுவலகங்களில் கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டம் கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் பேராசிரியர் ஜயலால் ரத்னசேகர தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இதில் கிழக்கு மாகாண அமைச்சுக்கள், திணைக்கள தலைவர்களின் பிரதானிகள் கலந்துகொண்டனர்.

மாவட்ட மட்டத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர்களின் தலைமையில் மாவட்டச் செயலகங்களில் புத்தாண்டு செயற்பாடுகள் ஆரம்பமாகின.

இதேபோல் கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்கள், பிரதேச செயலக மட்ட அரச அலுவலகங்களிலும் நிறுவன தலைவர்களால் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்ட உறுதிப்பிரமாணத்துடன் கடமைகள் ஆரம்பமாகின.

கிழக்கு மாகாணத்தில் வலயக்கல்வி, மாகாணக் கல்வி திணைக்களம், மாகாணக் கல்வி அமைச்சில் கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் நிகழ்வுகள் ஆரம்பமாகிய போதும் பாடசாலைகளில் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் நேற்று இடம்பெறவில்லை.

பாடசாலைகள் இன்று 02ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பமாகும் போது கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்தின் கீழான புத்தாண்டு கடமைகளை ஆரம்பிக்கும் வைபவங்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது

## ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில்...



**வி.சுகிர்தகுமார்**

அரச பொதுநிருவாக சுற்றுநிருபங்களின் பிரகாரம் வருடத்தின் முதல் கடமை நாள் தினத்தன்று அரச உத்தியோகத்தர்கள் உறுதிப்பிரமாணம் எடுக்கும் நிகழ்வு ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் நேற்று(01) காலை நடைபெற்றது. ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

தேசிய கொடியேற்றல் பின்னர் தேசிய கீதம் இசைக்கப்பட்டு தேசிய கொடிக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

தொடர்ந்து இறைவணக்கம் நாட்டிற்காக உயிர்நீத்த வீரர்களை நினைவுகூர்ந்து இரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டதன் பின்னர் உறுதி மொழி வாசிக்கப்பட்டு உறுதிப்பிரமாணம் எடுக்கப்பட்டது.

## அக்கரைப்பற்று மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில்...



**திகாமடுல்ல நிருபர்**

கிளீன் ஸ்ரீலங்கா தேசிய நிகழ்ச்சி திட்டம் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வாக அக்கரைப்பற்று மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி ஏ.சீ.றிஸ்வான், மேலதிக மாவட்ட நீதிபதி ரெசீபா ரஜீவன் உட்பட பதிவாளர்கள் உத்தியோகத்தர்கள் தேசியக் கொடியேற்றி உறுதிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

## கிண்ணியா பிரதேச செயலகத்தில்...



**கியாஸ் ஷாபி**

கிளீன் ஸ்ரீலங்கா எனும் தேசிச நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து, 2025 ஆம் ஆண்டின் அரச சேவைகளை முன்னெடுக்க, கிண்ணியா பிரதேச செயலக ஊழியர்களும் நேற்று ஆரம்பித்தனர்.

இந்த நிகழ்வு, கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி தலைமையில், பிரதேசசெயலக முன்றலில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளரினால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டதும், தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

## கல்முனை RDHSயில் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு



**றியாஸ் ஆதம்**

கிளீன் ஸ்ரீலங்கா (Clean Sri Lanka) தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்ததாக 2025ஆம் வருடத்தில் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம் பெற்றது.

பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்புவைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிராந்திய பிரிவுத் தலைவர்கள், பிராந்திய பணிமனையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து சகல உத்தியோகத்தர்களும் ஜனாதிபதி செயலகத்திலிருந்து ஊடகங்கள் வாயிலாக ஒலிபரப்பு செய்யப்பட்ட Clean Sri Lanka நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் தேசிய விழாவுடன் இணைந்துகொண்டதுடன் உறுதிப்பிரமாணத்தினையும் செய்துகொண்டனர்.

## காத்தான்குடி பிரதேச செயலகத்தில்



**காத்தான்குடி நிருபர்**

கிளீன் ஸ்ரீலங்கா தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்ததாக 2025ஆம் வருடத்தில் காத்தான்குடி பிரதேச செயலகத்தில் முதல் நாள் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

இதன் போது காத்தான்குடி பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் உறுதிப்பிரமாணம் இடம்பெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் உதயஸ்ரீதர் தலைமையில் அவர் உறுதிப்பிரமாண உறுதியுரையை கைகளை நீட்டி வாசிக்க ஏனைய அனைத்து உத்தியோகத்தர்ளும் கைகளை நீட்டி உறுதிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இதனை தொடர்ந்து பிரதேச செயலாளர் உதயஸ்ரீதர் உதவி பிரதேச செயலாளர் திருமதி சில்மியா கணக்காளர் சித்ரா ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

## தம்பலகாமம் பிரதேச செயலகத்தில்...



**ஏ.எச்.ஹஸ்பர்**

2025ம் ஆண்டின் முதலாம் நாளான நேற்று அரச திணைக்களங்களின் உறுதிப்பிரமாண நிகழ்வுகளுடன் கடமைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் ஒரு கட்டமாக தம்பலகாமம் பிரதேச செயலகத்திலும் உறுதி மொழி இடம்பெற்றது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் சகல உத்தியோகத்தர்களும் இணைந்து உறுதி மொழியினை எடுத்துக் கொண்டனர். க்ளீன் ஸ்ரீலங்கா என்ற தேசிய வேலைத்திட்டம் புதிய தொனிப்பொருளின் கீழ் குறித்த உறுதி மொழி நிகழ்வு இம்முறை ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டது.

## பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனையில் கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வு

**செ.துஜியந்தன்**

தூய்மையான இலங்கை வேலைத்திட்டத்தின் கீழ் புதிய வருடத்தில் அரச ஊழியர்கள் உத்தியோக பூர்வமாக கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வு பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் தலைமையில் நடைபெற்றது.

இங்கு வலயக் கல்விப் பணிப்பாளரினால் தேசியக் கொடி ஏற்றப்பட்டு தேசியகீதம் இசைக்கப்பட்டது.

நாட்டுக்காக உயிர்நீத்தவர்களுக்காக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு அதன் பின் தூய்மையான இலங்கை தேசிய வேலைத்திட்டத்தில் இணைந்து கொள்ளும் உறுதி மொழியை அனைத்து அரச ஊழியர்களும் உத்தியோகபூர்வமாக வாசித்து உறுதிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

அத்துடன் உத்தியோகத்தர்கள் ஒருவருக்கு ஒருவர் வாழ்த்துக்கள் தெரிவித்து பாற்சோறு, இனிப்புக்கள் பகிர்ந்து புதியவருடத்தினை வரவேற்றனர். இங்கு வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரனின் சிறப்புரை, ஊழியர்களின் பல்வேறு ஆற்றுகைகள் அரங்கேறியமை குறிப்பிடத்தக்கது.

## வீதி அபிவிருத்தி அதிகாரசபையில்



**சுலைமான் ராபி**

கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புத்தாண்டு கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அக்கரைப்பற்று மேலதிக மாகாண பணிப்பாளர் காரியாலயத்தில், மாகாணப்பணிப்பாளர் பொறியியலாளர் எம்.பி.அலியார் தலைமையில் நேற்று (01) அலுவலக வளாகத்தில் இடம்பெற்றது. இதில் மாகாணப் பணிப்பாளரினால் உறுதிப்பிரமாணம் முன்மொழியப்படுவதையும், உத்தியோகத்தர்கள் உறுதி மொழி எடுப்பதையும் காணலாம்.

# வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு

**அக்கரைப்பற்று நிருபர்**



தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி கல்வி அமைச்சின் தேசிய நூலக பிரிவினரால் நடாத்தப்பட்ட பல்வேறு போட்டிகளிலும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அக்கரைப்பற்று மாநகர சபையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட நினைவுச்சின்னங்கள், சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வுகள் மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றன.

மாநகர சபை செயலாளர் எ.எம்.ஹபீபுர் ரகுமான் தலை மையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு மாநகர சபை ஆணையாளர் எ.ரீ.எம் ராபீ பிரதம விருந்தனராகக் கலந்துகொண்டு நினைவுச்சின்னங்களையும் சான்றிதழ்களையும் வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட மாநகர சபை வைத்திய அதிகாரி டாக்டர் சமினா ஹம்தூன், முகாமைத்துவ உதவியாளர் எம்.எ.சலீத், உதவி கணக்காளர் திருமதி எஸ்.கிருபாகரன்உட்பட அழைக்கபட்டிருந்த விசேட அதிதிகளும் பரிசில்களை வழங்கினர்.

கல்வி அமைச்சின் தேசிய நூலக பிரிவினரால் "உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே "எனும் தொனிப்பொருளில் ஒழுங்கு செய்யயப்பட்ட இந்நிகழ்வுகளில் மாற்றுதிறனாளி மாணவர்கள் தமது ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் பாட்டு, நடனம், கதை சொல்லல், போன்றவைகளிலும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டமை விசேட அம்சமாகும்.

அக்கரைப்பற்று மாநகரசபையின் நூலகர் ஐ எல்.எம் ஹனிபாவின் பணிப்புரைக்கு அமைவாக போட்டிகள் சிறந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

வெற்றி வெற்றிஈற்றிய மாணவர்கள் தத்தமது பாடசாலை பொறுப்பசிரியர்களுடனும் அதிபர்களுடன் வருகை தந்திருந்தனர்.

# வீதி சமிக்ஞைகளின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு வரியிறுப்பாளர்கள் கோரிக்கை

**முகம்மட் முக்தார்**

கல்முனை மாநகர சபை எல்லைக்குள்வீதிப் போக்குவரத்து கட்டமைப்பை மேம்படுத்தும் விதத் தில் வீதி சமிக்ஞை விளக்குகளின் எண்ணிக் கையை அதிகரிக்கவேண்டுமென வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கல்முனை மாநகர வரியிறுப்பாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தற்போது கல்முனை மாநகர எல்லைக்குள் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை, கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை ஆகிய இரு இடங்களில் மட்டும் வீதிச் சமிக்ஞைகள் பொருத்தப்பட்டுள்ளன.கல்முனை மாநகர எல்லைக்குள் வாகனங்கள் அதிகரித்துள்ளமையாலும் வாகனங்கள் ஒன்றையொன்று முந்திச்செல்லும் போக்கும் அதிகரித்துள்ளதால் வீதிவிபத்துக்கள் அதிகரிக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளன.

கல்முனை மாநகர சபை எல்லைக்குள் பாண்டிருப்பு – நற்பட்டிமுனை எல்லை நாற் சந்தி, பெரியநீலாவணை – துறை நீலாவணை நாற் சந்தி, கல்முனை மஹ்மூத் பாளிகா முச்சந்தி, மாளிகைக்காடு, முச்சந்தி, கல்முனை பஸ் நிலைய சந்தி என்பன மக்களும், வாகனங்களும் அதிகமாக பரிமாறும், இடமாறும் சந்திகளாகவும் உள்ளன.இச்சந்திகளில் வீதி சமிக்ஞைகளை அமைத்து போக்குவரத்தை இலகுபடுத்த வேண்டியது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் முக்கிய கடமையாகும்.

இது தவிர மாளிகைக்காடு சந்தி, சாய்ந்தமருது பொலிவேரியனுக்கு செல்லும் நாற்சந்தி கல்முனை பாளிகா முச் சந்திப்பு ஆகியவற்றில் வாகனங்கள் தரித்துச் செல்லும் வகையில் வீதி வலைப்பின்னல் அடையாளங்களும் அமைக்கப்பட வேண்டும். வீதிஅபிவிருத்திஅதிகார சபையினர், கல்முனை மாநகர சபை, கல்முனை போக்குவரத்து பொலிசார் ஆகியோர் ஒன்றிணைந்து கல்முனை மாநகர எல்லைக்குள் வாகனவிபத்துக்கள் ஏற்படாத வண்ணம் தேவையான வீதிச்சமிக்ஞை கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என கல்முனை மாநகர வரியிறுப்பாளர்கள் கோருகின்றனர்.

# அனர்த்தங்களிலிருந்து மக்களை பாதுகாக்கும் வேலைத்திட்டம்: அதிகாரிகளுடன் கலந்துரையாடல்

**அக்கரைப்பற்று நமது நிருபர்**

அக்கரைப்பற்று மாநகர சபை எல்லையில் அதிகரித்து வரும் பல்வேறு அனர்த்தங்கள் தொடர்பாக ஆராய்ந்து அனர்த்தங்களிலிருந்து மக்களை பாதுகாக்கும் பொருட்டு மேற்கொள்ள வேண்டிய அவசர வேலைத்திட்டங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட மகாநாடு அக்கரைப்பற்று மாநகர மகாநாட்டு மண்டபத்தில் நடை பெற்றது.

மாநகர ஆணையாளர் எ.ரீ.எம்.ராபீ தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகார அதிகார சபை, தேசிய நீர்வளங்கள் வடிகான் சபை, நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் பாதுகாப்பு படையினர், அனர்த்த முகாமைத்துவ அதிகார சபை போன்றவைகளின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

மாநகர ஆணையாளர் ராபீயின் ஒரு "கூகுள் மெப்" படஉதவியினூடான விளக்க உரையைய டுத்து வெள்ளம், விபத்துகள், சுற்றாடல் மாசடைதல், அங்கீகாரமற்ற கட்டிடங்கள், நீர் வட்டிகான்களை பொறுப்பற்ற முறையில் கழிவுகளைப் போட்டு நிரப்புதல், வீதியோர வியாபார நடவடிக்கைகள், விபத்துக்கள் போன்ற வைகள் தொடர்காக விரிவாக ஆராயப்பட்டன.

# மலையக மக்கள் முன்னணி; மறுசீரமைப்பு ஆரம்பம்

## தலைவர் வே.இராதாகிருஸ்ணன் எம்.பி தெரிவிப்பு

▪ க.கிஷாந்தன்

தை பிறந்த கையோடு மலையக மக்கள் முன்னணியில் மறுசீரமைப்பு நடவடிக்கை ஆரம்பமாகும் என்று மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

மலையைக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவரும், முன்னாள் அமைச்சருமான அமரர் பெ.சந்திரசேகரனின் 15ஆவது பிரார்த்த தினம், நேற்று மதியம் 2 மணிக்கு, ஹற்றனில் மலையக மக்கள் முன்னணியின் காரியாலயத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே..ராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற



இந்நிகழ்வில் முன்னணியின் பிரதி தலைவரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர்.ராஜாராம், முன்னணியின் செயலாளர் நாயகம் எஸ்.விஜய சந்திரன், மலையக தொழிலாளர் முன்னணியின் பொதுச் செயலாளர் புஷ்பா விஷ்வநாதன், நிதி செயலாளர் தாளமுத்து சுதாகரன் உள்ளிட்ட ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மேடையில் வைக்கப்பட்டிருந்த அமரர்.பெ.சந்திர சேகரனின் உருவப்படத்திற்கு மலர் மாலையை முன்னணி யின் தலைவர் இராதாகிருஷ்ணன் அணிவித்தார்.

இதனையடுத்து அதிதிகள் நினைவுச்சுடர் ஏற்றியதுடன், அங்குக் கலந்து கொண்ட பொது மக்களும் நினைவுச் சுடர்களை ஏற்றி வைத்தனர்.

இந்நிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மலையக மக்கள் முன்னணி தனித்துவமான கட்சியாகும். அக்கட்சி மறுசீரமைக்கப்பட வேண்டும் என மக்கள் தரப்பிலிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கமைய விசேட குழு ஒன்றை அமைத்திருந்தோம்.

அந்த குழுவினால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளுக்கமைய எதிர்வரும் பொங்கலுக்குப் பின்னர் மறுசீரமைப்பு பணி இடம்பெறும்.

அத்துடன், உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பிலும் அவதானம் செலுத்தியுள்ளோம். அத்தேர்தலை மலையக மக்கள் முன்னணி தனித்து எதிர்கொள்ள வேண்டும் எனக் கட்சி உறுப்பினர்கள் சிலர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அந்த கோரிக்கைகள் குறித்தும் பரிசீலித்து வருகின்றோம் என்றார்.

# வடக்கு ஆளுநர் - பலாலி விமானப்படைத் தளபதி சந்திப்பு



▪ பு.கஜிந்தன்

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை, பலாலி விமானப்படைத் தளபதி குறூப் கப்டன் குமாரசிறி சம்பிரதாயபூர்மாக நேற்று காலை ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது புத்தாண்டு வாழ்த்துக்களை இருவரும் பரிமாறிக்கொண்டதுடன், எதிர்காலத்தில் தொடர்ந்து சந்தித்துப் பேசுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

# மலையகத்தில் புத்தாண்டு சிறப்பு நிகழ்வுகள்



▪ க.கிஷாந்தன்

உலகெங்கிலும் 2025 ஆங்கில புத்தாண்டை வரவேற்கும் கொண்டாட்டங்கள் நடைபெற்ற நிலையில் மலையகத்திலும் புதுவருட கொண்டாட்டங்களும் வாண வேடிக்கைகளும் இடம்பெற்றன.

இதன்போது நள்ளிரவு 12மணியளவில் வான வேடிக்கைகள் வெடிக்கப்பட்டதுடன் இவற்றினை கண்டு களிப்பதற்காகப் பெருமளவு மக்கள் நகருக்குள் ஒன்று கூடியிருந்தனர்.

அதோடு புத்தாண்டை முன்னிட்டு கொட்டகலை ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில் குருக்கள் ஸ்ரீ கந்தன் தலைமையில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

நாட்டில் சாந்தியும் சமாதானமும் ஏற்படவும், மக்கள் மகிழ்ச்சியுடன் வாழவும் சிறப்புப் பிரார்த்தனைகள் முன்னெடுக்கப்பட்டன.

பக்தர்கள் ஆலயத்திற்கு வருகைதந்து நெய் விளக்கு ஏற்றி வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் தங்களுக்குள் வாழ்த்துகளும் தெரிவித்துக்கொண்டதைக் காணமுடிந்தது.

கிறிஸ்தவ தேவாலயங்களில் புதுவருட ஆராதனைகளும், மசூதிகளில் விசேட பிரார்த்தனைகளும், இடம்பெற்றதோடு, விகாரைகளிலும் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

# கிளிநொச்சி கனகபுரத்தில் கடை உடைத்து திருட்டு

▪ பு.கஜிந்தன்

கிளிநொச்சி கனகபுரத்தில் தொலைப் பேசி விற்பனை நிலையம் ஒன்று நேற்று முன்தினம் (31) நள்ளிரவு உடைக்கப்பட்டு அதிலிருந்த பொருட்கள் களவாடப் பட்டுள்ளன.

இது குறித்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு பதிவு செய்யப்பட்டது. அதனடிப்படையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் குற்றப் புலனாய்வு பிரிவின் பொறுப் பதிகாரி விஜயராஜா தலைமையிலான குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஆரம்பக்கட்ட விசாரணையில், சிசிரிவி காட்சிகளின் அடிப்படையில் இருபது வயது மதிக்கத்தக்க இரண்டு நபர்கள் குறித்த திருட்டில் ஈடுபட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டது. சுமார் ஒரு இலட்சம் ரூபா மதிக்கத்தக்க கைபேசி மற்றும் smart watches என்பன களவாடப்பட்டுள்ள தாகத் தெரியவருகிறது.

# தலதா மாளிகையில் உலக மக்களுக்காக நல்லாசி பூஜை



▪ எம்.ஏ.அமீனுல்லா

புத்தாண்டில் இலங்கை வாழ் மக்கள் உட்பட உலகில் வாழும் அனைத்து மக்களுக்கும் நல்லாசி வேண்டி, வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் நேற்று (1) செத் பிரித் பாராயண வழிபாடுகள் நடைபெற்றன

மல்வத்து மகா விகாரை மகாநாயக்கர் வண. வரகாகொட ஸ்ரீ ஞானரதன தேரர் , அஸ்கிரி விகாரையின் அனுநாயக்க வண. ஆனமடுவே ஸ்ரீ தம்மதஸ்ஸி, மல்வத்து மகா விகாரை அனுநாயக்க வண. திம்புல்கும்புரே விமலதம்ம பீடாதிபதிகள் உள்ளிட்ட பல முக்கிய மத பெரியார்களினால் இந்த செத்பிரித் ஆராதனை நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீ தலதா மாளிகையின் தியவதன நிலமே பிரதீப் நிலங்க தேல மற்றும் தலதா மாளிகையின் ஊழியர்களும் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# மகேஸ்வரனின் 17ஆவது ஆண்டு நினைவேந்தல்



▪ பு.கஜிந்தன்

கொழும்பில் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட, ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் தியாகாராஜா மகேஸ் வரனின் 17ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று வட்டுக் கோட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நினைவேந்தல் நிகழ்வு ஐக்கிய தேசியக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி அமைப்பாளர் விஜிமருதன் தலை மையில் நடைபெற்றது.

இதன்போது பூஜை வழிபாடு இடம் பெற்றதுடன், அதனை யடுத்து ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு, அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் வட்டுக்கோட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் விஜிமருதன், மதகுருமார்கள், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



மத்திய மாகாண சபையின் 2025ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு மத்திய மாகாண சபையின் தலைவர் எல்.டி.நிமலசிறி மற்றும் மத்திய மாகாண பிரதம செயலாளர் அஜித் பிரேமசிங்க ஆகியோர் தலைமையில் மாகாண சபை வளாகத்தில் நேற்று (01) நடைபெற்றது. படம் : எம்.ஏ.அமீனுல்லா

# நாகை கப்பல் சேவை இன்று முதல் மீண்டும் ஆரம்பம்!

தமிழகத்தின் நாகப்பட்டினத்திலிருந்து காங்கேசன்துறைக்கான பயணிகள் கப்பல்போக்குவரத்து இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப் படவுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாகக் குறித்த கப்பல் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

இந்தநிலையில் நிலவும் காலநிலையைக் கருத்திற் கொண்டு கப்பல் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் குறித்த கப்பல் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சுந்தர் ராஜன் தெரிவித்துள்ளார்.

தமிழகம் மற்றும் இலங்கை இடையே கப்பல் சேவை சுமார் 40ஆண்டு கால இடைவெளிக்கு பிறகு கடந்த 2023ஆம் ஆண்டு மீண்டும் தொடங்கப்பட்ட நிலையில், வடகிழக்கு பருவமழை காரணமாக தற்காலிகமாக இந்த கப்பல் சேவை நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், மீண்டும் இந்த சேவை ஜனவரி மாதம் 2ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என்றும், இதற்கான முன்பதிவு டிசம்பர் 25 முதல் ஆரம்பிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிளாஸ்கோ தோட்டத்தில் கஞ்சா செடி வளர்த்தவர் கைது

▪ டி.சந்ரு செ.திவாகரன் நானுஓயா நிருபர்

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்டஅக்கரப்பத்தனை கிளாஸ்கோ பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி கஞ்சா செடிகளை வளர்த்து வந்த நபரொருவரை பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரப்பத்தனை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய இச்சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதுடன், இதன் போது 11 கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அவை சுமார் 2 அடி உயரம் வரை வளர்ந்திருந்தது எனவும் பொலிஸார் தெரிவித்தனர் .

மேலும் உதவி தோட்ட அதிகாரி சந்தேகத்தின் பேரில் நேற்று (01) பிற்பகல் கைது செய்யப்பட்டதாக அகரபத்தனை பொலிஸார் தெரிவித் தனர்.

இதையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும் கைப்பற்றப்பட்ட கஞ்சா செடிகளையும் இன்று(02) நுவரெலியா மாவட்ட நீதவான் நீதி மன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் அக்கரப்பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.



2025 புதுவருடத்தை முன்னிட்டு சப்ரகமுவ மாகாண சபை உத்தியோகஸ்தர்கள் நேற்று (01) தமது கடமைகளை ஆரம்பித்தனர். மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்னவினால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது. அதன்பின் நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த அனைவருக்கும் மௌன அஞ்சலி, ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து இலத்திரனில் ஊடகங்கள் ஊடாக ஒலிபரப்பப்பட்ட (Clean Sri Lanka) நிகழ்ச்சியில் அனைவரும் இணைந்து கொண்டனர். படங்கள் : இரத்தினபுரி நிருபர்

# இலங்கையில் விடுதலையான 20 மீனவர்கள் இந்தியா சென்றனர்

இலங்கை சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட 20 இந்திய மீனவர்களும் விமானம் மூலம் சென்னை வந்ததாக புதன்கிழமை (01) இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஓராண்டுக்கு முன் இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தமிழகத்தின் புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். இந்திய-இலங்கை அரசாங்க அதிகாரிளின் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் 20 மீனவர்களும் விடுவிக்கப்பட்ட நிலையில், இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். அதையடுத்து அவர்களுக்கு தற்காலிக குடியுரிமை சான்றிதழ் வழங்கப்பட்டு, விமானம் மூலமாக கொழும்பில் இருந்து சென்னை விமான நிலையத்திற்கு மீனவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். சென்னை விமான நிலையத்தை மீனவர்கள் சென்றடைந்ததும், அவர்களது குடியுரிமை சரிபார்ப்பு, இந்திய சுங்கச் சோதனை மற்றும் பிற சம்பிரதாயங்களுக்கு உட்பட்டு விடுவிக்கப்பட்டனர். பின்னர் அவர்களை மீன்வளத்துறை அதிகாரிகள் வரவேற்று, தனி வாகனங்களில் சொந்த ஊர்களுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் மேற்கொண்டிருந்தனர்.

முன்னதாக கடந்த டிசம்பர் 24 அன்று, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், இலங்கை கடற்படையின் பிடியில் உள்ள 20 இந்திய மீனவர்களையும் அவர்களது இயந்திரப் படகுகளுடன் உடனடியாக விடுவிக்க இராஜதந்திர முயற்சிகளை மேற்கொள்ளுமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

அக்கடிதத்தில், அடிக்கடி மேற்கொள்ளப்படும் கைதுகள் மற்றும் தாக்குதல்கள், பாரம்பரிய கடற்பரப்பில் மீன்பிடிப்பதை



மட்டுமே நம்பி வாழும் 'எங்கள்' மீனவர்களின் வாழ்க்கை மிகவும் நிச்சயமற்றதாகவும் ஆபத்தினை எதிர்கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் 242 வாகனங்கள் பறிமுதல்

புத்தாண்டையொட்டி சென்னையில் 425 இடங்களில் பொலிஸார் நேற்று வாகனத் தணிக்கையில் ஈடுபட்டதையடுத்து 242 வாகனங்களை பறிமுதல் செய்தனர். புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது பைக் வீலிங், ரேஸ் உள்ளிட்டவற்றில் ஈடுபடக்கூடாது என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர். இதனை மீறி பைக் ரேஸ் மற்றும் வீலிங் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. புத்தாண்டையொட்டி சென்னையில் 425 இடங்களில் பொலிஸார் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டனர்.



அப்போது பைக் ரேஸில் ஈடுபட்ட 242 மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தகவல் தெரிவித்துள்ளனர். பைக் ரேஸ், அதிவேகமாக வாகனங்களில் பயணித்தது மற்றும் குடிபோதையில் வாகனங்களில் பயணித்தது போன்ற காரணங்களுக்காக அவர்களிடமிருந்து வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உத்தரபிரதேஷில் குடும்ப தகராறில் தாய், 4 சகோதரிகளை கொன்ற நபர்




குடும்பத் தகராறு காரணமாக உத்தரபிரதேசத்தில் இளைஞன் ஒருவர், தனது தாய் மற்றும் நான்கு சகோதரிகளை லங்னோவில் அமைந்துள்ள ஒரு ஹோட்டலில் வைத்து செவ்வாய்க்கிழமை (டிசம்பர் 31) இரவு கொலை செய்துள்ளதாக இந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றம் சாட்டப்பட்ட 24 வயதான அர்ஷத் என்ற  இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார். மணிக்கட்டில் வெட்டுக் காயங்களுடனும், ஆடைகள் இரத்தத்தில் நனைந்த நிலையில் 5 பேரும் குறித்த ஹோட்டலில் உயிரிழந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். ஆரம்பக் கட்ட விசாரணைகளில் உயிரிழந்தவர்கள் சாப்பிட்ட உணவில் போதைப்பொருள் கலந்து இருந்தது தெரியவந்துள்ளது. குடும்ப உறுப்பினர்கள் சிலர் கழுத்தை நெரித்து கொலைசெய்யப்பட்டதாகவும், ஏனையவர்கள் பிளேடால் அறுத்து கொல்லப்பட்டதாகவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். சம்பவத்திற்கு முன்னர் குடும்ப உறுப்பினர்களுக்கும் மதுபானம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த கொலை வழக்கில் அர்ஷாத்தின் தந்தை பதர் என்பவரையும் பொலிஸார் சந்தேக நபராக பெயரிட்டுள்ளனர். அவர் இன்னும் தலைமறைவாக உள்ளதால், அவரை தேடும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

ஆக்ராவைச் சேர்ந்த குடும்பம், டிசம்பர் 30 முதல் ஹோட்டலில் தங்கியிருந்தது.

இறந்தவர்கள் அர்ஷத்தின் தாய் அஸ்மா, அர்ஷத்தின் சகோதரிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர், அவர்கள் முறையே 9, 16, 18 மற்றும் 19 வயதினை உடையவர்கள் ஆவர். மீட்கப்பட்ட சடலங்கள் பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

# மின்சார வாகனங்களுக்கு சலுகைகள் அதிகரிப்பு

மின்சார கார் மற்றும் இரு சக்கர வாகனங்களுக்கு, அவற்றை விற்பனை செய்யும் நிறுவனங்கள் வழங்கும் சலுகைகள் அதிகரித்துள்ளன.



வாகன கையிருப்பு, பேட்டரி மற்றும் உதிரிப்பாகங்கள் விலை குறைப்பு, பசுமை சுற்றுச்சூழலை ஊக்குவிக்கும் விதிமுறைகளின் அழுத்தம் போன்றவற்றின் காரணமாக, மின் வாகனங்களுக்கு சலுகைகள் வழங்கப்படுவது அதிகரித்துள்ளது. டாடா, மஹேந்திரா உள்ளிட்ட கார் நிறுவனங்கள், ஏத்தர், விடா உள்ளிட்ட இரு சக்கர வாகன நிறுவனங்கள் மின்சார வாகனங்களுக்கு பல்வேறு சலுகைகளை அறிவித்துள்ளன. இரு சக்கர வாகனங்களுக்கு, 10 முதல் 20 சதவீதம் கார்களுக்கு, 3 இலட்சம் இந்திய ரூபாய் வரை சலுகைகள் வழங்கப்படுகின்றன. மின்சார இரு சக்கர வாகனங்களை, இணைய வழி வணிக நிறுவனமான, "பிளிப்கார்ட்" வாயிலாக வாங்கினால், கூடுதலாக 5000 இந்திய ரூபாய் வரை சலுகை வழங்கப்படுகிறது. மின் வாகனங்களை ஊக்குவிக்க, வாகன நிறுவனங்கள், தங்களின் இலாபத்தை குறைத்து, வாடிக்கையாளர்களுக்கு சலுகைகளை வழங்குகின்றன. இதற்கு ஆதரவு அளிக்கும் வகையில், விநியோக முகவர்களும் சில சலுகைகளை வழங்குகின்றனர். அதாவது, வாகன பரிமாற்ற சலுகை, 15,000 ஆயிரம் இந்திய ரூபாய் வரையும், முகவர் சலுகை 3000 முதல் 5000 இந்திய ரூபாய் வரையும் வழங்கப்படுகிறது. தர ஆய்வு நிறுவனமான, "இக்ரா" தரவுகளின்படி, 2021 – 2022ம் ஆண்டின் மொத்த வாகன விற்பனையில், மின் வாகன பங்கு 2 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தது. அதே, நடப்பு நிதியாண்டில், அது 5.5 சதவீதமாக உயர்ந்துள்ளது. வரும் 2030 இற்குள் இரு சக்கர மின்வாகன பங்கு, 25 சதவீதமாகவும், மின்சார பயணியர் கார் பங்கு 15 சதவீதமாகவும் அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியர்களுக்கு மன்னர் சார்லஸ் வழங்கும் கௌரவ விருது

இங்கிலாந்தில் இந்திய வம்சாவளியினர் 30 பேருக்கு மன்னர் சார்லஸால் கௌரவ விருது வழங்கப்படும் என இங்கிலாந்து அமைச்சரவை பட்டியலை வெளியிட்டுள்ளது.

2025ம் ஆண்டுக்கான கௌரவ விருதை பெறுபவர்களின் பட்டியலை இங்கிலாந்து அமைச்சரவை வெளியிட்டுள்ளது. பல்வேறு துறைகளைச் சேர்ந்த 1,200 இற்கும் மேற்பட்டோருக்கு விருது வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் ஒவ்வொரு ஆண்டும் புத்தாண்டையொட்டி விளையாட்டு, சுகாதாரம், கல்வித்துறை மற்றும் தன்னார்வ சேவை ஆகியவற்றில் முன்மாதிரியாக இருப்பவர்களுக்கு கௌரவ விருது வழங்கப்படுகிறது. அந்தவகையில் 2025ம் ஆண்டுக்கான கௌரவ விருதை பெறுபவர்களின் பட்டியலை இங்கிலாந்து அமைச்சரவை வெளியிட்டுள்ளது. பல்வேறு துறைகளை சேர்ந்த 1,200



இற்கும் மேற்பட்டோருக்கு விருது வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்திய வம்சாவளியினர் 30 பேருக்கு இந்த கௌரவ விருது வழங்கப்பட உள்ளது. பட்டியலில் இடம்பெற்றவர்களுக்கு மன்னர் சார்லஸ் விருது வழங்கி கௌரவிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4ஆம் பக்கத் தொடர்

# உப்பு இறக்குமதி செய்யும் அரசு உற்பத்தியை பாதுகாக்குமா ?

மேலும், உப்பு ஆராய்ச்சியை ஊக்குவித்து, இலங்கையின் காலநிலைக்கு ஏற்ற உப்பு உற்பத்தி முறைகளை முன்னேற்றம் செய்வதற்கு ஊக்குவிப்பதோடு, உள்நாட்டு உப்பு உற்பத்தியின் முக்கியத்துவம் குறித்து மக்களிடமும், தொழில்துறை முயற்சியாளர்களிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் முக்கியமானதாகும்.

கிண்ணியா பிரதேசத்தில் சுமார் 400 குடும்பங்கள் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக சிறு வயல்களில் உப்பு உற்பத்தி செய்கிறார்கள்.

ஆயினும், அவர்களுடைய உற்பத்திக்கு இலாபம் பெறக்கூடிய  விலை கிடைப்பதில்லை. உற்பத்தியாளர்களிடமிருந்து தரகர்கள் குறைந்த விலைக்கு உப்பைக் கொள்வனவு செய்வதால், உற்பத்தியாளர்களை விட தரகர்களே அதிக இலாபம் அடைகிறார்கள்.

எமது உப்பையும் அயடீன் சேர்க்கும் தொழில் நுட்பத்திற்குள் உள்வாங்கினால் உப்பின் தரத்தை அதிகரிக்க முடியும். இதனால் எங்களுடைய உற்பத்தியை திருகோணமலை மாவட்டத்திலேயே சந்தைப்படுத்த முடியும். உப்புத் தேவையில் இந்த மாவட்டம் தன்னிறைவு அடையும்.

அரசாங்கம் இதனை கவனம் எடுத்து தொழில்நுட்ப ரீதியான அறிவையும் வசதிகளையும் எங்களுக்கு வழங்குவதன் மூலம் எங்களை  ஊக்குவிக்க வேண்டும்." என்கிறார் கச்சக்கொடித்தீவு உப்பு உற்பத்தியாளர்  கூட்டுறவு சங்கத் தலைவர் முஹம்மது அஸ்ஹர்.

"கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் நடுஊற்று, காக்காமுனை, கச்சக்கொடித்தீவு ஆகிய  கிராமங்களில், சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்த உப்பு உற்பத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றினாலும், உப்பு உற்பத்தியை ஊக்குவித்து மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரச அதிகாரிகள் எடுத்திருக்கவில்லை. கிண்ணியா உப்பு உற்பத்தியாளர்களுக்கான காணி அனுமதிப் பத்திரம் இதுவரை வழங்கப்படாமல் இருப்பது உப்பு உற்பத்தியாளர்களை ஊக்கமிழக்கச் செய்திருக்கிறது. இந்தக் காணி தொடர்பான முழு அதிகாரம் கொண்டவர் பிரதேச செயலாளர். எனவே உப்பளக்  காணியை அவர்களுக்கு வழங்குவதன் மூலம் மக்கள் ஆர்வத்துடன் தொழிலில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு உள்ளது. அதன் மூலம் பிரதேசத்தில் பொருளாதார அபிவிருத்தியை எட்ட முடியும் என்கிறார் கிண்ணியா சமூக அபிவிருத்திக்கான முன்னணி எனும் அமைப்பின் தலைவர் பைசர் இஸ்மாயில்.

உப்பு என்பது ஒரு பொருள் என்பதைத் தாண்டி, அது இலங்கையின் பொருளாதாரத்துக்கும் பண்பாட்டுக்கும் முக்கியமானது. உப்பு உற்பத்தி துறையைப் பாதுகாக்கவும் வலுப்படுத்தவும் ஆவன செய்யப்பட வேண்டும். இதைச் செய்வது மட்டுமே தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும். காலநிலைக்கு எதிரான திறன்களை மேம்படுத்தி, தன்னிறைவை நோக்கி பயணிப்பதன் மூலம், இலங்கை நிலையான உப்பு உற்பத்தியில் ஏற்றுமதித் தரத்தை எட்ட முடியும். இலங்கையின் உப்பு உற்பத்தித் துறையைப் பாதுகாக்க புதிய அரசு அவசர, அவசிய அக்கறை காட்ட வேண்டும்.

# ஐரோப்பாவுக்கான ரஷ்ய எரிவாயு விநியோகம் புத்தாண்டுடன் நிறுத்தம்



உக்ரேனின் எரிவாயு போக்குவரத்து நிறுவனமான **Nafto** பயண மற்றும் ரஷ்யாவின் **Gazprom** ஆகியவற்றுக்கு இடையேயான 05 ஆண்டு ஒப்பந்தம் காலாவதியான பின்னர், உக்ரேன் வழியாக ஐரோப்பாவிற்கான ரஷ்ய எரிவாயு விநியோகம் 2025 புத்தாண்டு தினத்துடன் முடிவுக்கு வந்தது.

இது ஐரோப்பிய எரிவாயு சந்தையில் மொஸ்கோவின் நீண்ட கால ஆதிக்கத்துக்கான முற்றுப்புள்ளியாக அமைந்தது. அதேநேரம், மாற்று வழியை தேடுவதன் மூலம் ரஷ்ய ஆற்றலைச் சார்ந்திருப்பதைக் குறைக்க ஐரோப்பிய ஒன்றியம் அதன் முயற்சியையும் இரட்டிப்பாக்கியது. மேற்கண்ட ஒப்பந்தமானது இரு நாடுகளுக்கிடையே 2019 ஆம் ஆண்டில் எட்டப்பட்டது.

இது ரஷ்யாவின் திரவ இயற்கை எரிவாயு **(LNG)** ஏற்றுமதியை உக்ரேன் வாயிலாக ஐரோப்பிய நாடுகளுக்கு மலிவான விலைகளில் கொண்டு செல்வதற்கு அனுமதித்தது. இந்த ஒப்பந்தம் மிகவும் இலாபகரமானது, ரஷ்யாவுக்கு வருவாயிலும், உக்ரேனுக்கு போக்குவரத்து கட்டணத்திலும் பில்லியன்களை சேர்த்தது. இந்த நிலையில், ஒப்பந்தம் நிறைவு குறித்து கருத்து வெளியிட்டுள்ள உக்ரேனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி **(Volodymyr Zelensky)** "எங்கள் இரத்தத்தில் கூடுதல் பில்லியன்களை சம்பாதிக்க" ரஷ்யாவை அனுதிக்க மாட்டோம் என்றதுடன், ஒப்பந்தத்தை புதுப்பிக்கும் திட்டம் எதுவும் இல்லை என்று அறிவித்தார்.

ஐரோப்பாவிற்கான ரஷ்யாவின் பழமையான எரிவாயு வழியை நிறுத்துவது, 2014 இல் உக்ரேனிய கிரிமியன் தீபகற்பத்தை இணைத்ததில் தொடங்கி, கண்டத்துடன் ஒரு தசாப்த கால கொந்தளிப்பான உறவுகளை முடிவுக்குக் கொண்டுவருகிறது. 2022 பெப்ரவரியில் உக்ரேன் மீது படையெடுத்ததில் இருந்து ரஷ்ய ஆற்றலைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதற்கான அதன் முயற்சிகளை ஐரோப்பிய ஒன்றியம் தீவிரப்படுத்தி வருகிறது. பிரஸ்ஸல்ஸ் வெளியிட்ட புள்ளிவிவரங்கள், 2023 இல் மொத்த எரிவாயு இறக்குமதியில் 8% ரஷ்ய எரிவாயுவாக இருந்ததாகக் குறிப்பிடுகிறது. இதற்கு மாறாக, அந்த எண்ணிக்கை 2021 இல் 40% க்கு மேல் இருந்தது. பிரஸ் ஸல்ஸ் ரஷ்யாவின் எரிவாயு இறக்குமதியை கணிசமாகக் குறைத்த போதிலும், பல கிழக்கு ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள் இன்னும் பெரும்பாலும் மொஸ்கோவை நம்பியுள்ளன.

ஆஸ்திரியா மற்றும் ஸ்லோவாக்கியா போன்ற நாடுகள் இன்னும் பெருமளவிலான ரஷ்ய எரிவாயுவை இறக்குமதி செய்கின்றன, இது மொஸ்கோவிற்கு வருவாயில் சுமார் 5 பில்லியன் யூரோக்கள் ஆகும்.

இதேவேளை உக்ரேன் வழியான எரிவாயு விநியோக முடிவினால், ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினர்கள் அல்லாத பிற ஐரோப்பிய நாடுகளும் பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு காலத்தில் சோவியத் யூனியனின் ஒரு பகுதியாக இருந்த மால்டோவா கடுமையான இழப்புகளை சந்திக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.




# ஹமாஸின் நுக்பா படைப்பிரிவு தளபதி உயிரிழப்பு ; இஸ்ரேல் உறுதி

ஹமாஸின் நுக்பா படைப்பிரிவு தளபதி அப்துல் ஹாதி ட்ரோன் தாக்குதலில் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் பாதுகாப்பு படை உறுதிப்படுத்தி இருக்கிறது. கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி கிபுட்ஸ் நிர் ஓஸ் இல் நடத்தப்பட்ட கொடூர தாக்குதலை அப்துல் ஹாதி சபா வழிநடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளதுடன் நுக்பா படைப்பிரிவு தளபதி தெற்கு காஸாவில் உள்ள கான் யூனிஸ் பகுதியில் வைத்து கொல்லப்பட்டதாக இஸ்ரேல் பாதுகாப்பு படைகள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இது குறித்த எக்ஸ் சமூக வலைத்தளப் பதிவில், "இஸ்ரேல் பாதுகாப்பு படையின் உளவுத்துறை மற்றும் ஐ.எஸ்.ஏ. தாக்குதலில் நுக்பா படைப்பிரிவு தளபதியான அப்துல் ஹாதி சபா கொல்லப்பட்டார்" என்று இஸ்ரேல் பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது. கொல்லப்பட்ட அப்துல் ஹாதி சபா இஸ்ரேல் பாதுகாப்பு படைகளுக்கு எதிராக பல்வேறு பயங்கரவாத தாக்குதல்களை வழிநடத்தியுள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது.

அத்துடன் ஒக்டோபர் 7 ஆம் திகதி நடத்தப்பட்ட கொடூர தாக்குதலில் பின்புலமாக இருந்த அனைத்து பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கை தொடரும் என்று இஸ்ரேல் பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது.

# விண்வெளியில் 16 முறை புத்தாண்டு கொண்டாடும் சுனிதா வில்லியம்ஸ்

அமெரிக்க விண்வெளி வீராங்கனையான இந்திய வம்சாவளியை சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் தற்போது சர்வதேச விண்வெளி நிலையத்தில் உள்ளார். கடந்த ஜுன் 5 ஆம் திகதி விண்வெளிக்கு சென்ற அவர், விண்கலத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக பூமிக்கு திரும்ப முடியாமல் சிக்கியுள்ளார்.

அவர் வருகின்ற மார்ச் மாதம் பூமிக்கு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் சர்வதேச விண்வெளி மையத்தில் உள்ள சுனிதா வில்லியம்ஸ் உட்பட்ட குழுவினர் அனைவரும் 16 முறை புத்தாண்டு கொண்டாடுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதுகுறித்து சர்வதேச விண்வெளி மையம், பூமிக்கு மேல் 400 கி.மீ உயரத்தில் மிதந்து கொண்டிருக்கும் எக்ஸ்பெடிஷன் 72 குழுவினர், பூமியைச் சுற்றி வரும்போது 2025 பிறக்கும் தருணத்தில் 16 சூரிய உதயங்களையும் அஸ்தமனங்களையும் காண்பார்கள் என தெரிவித்துள்ளது.

# எக்ஸ் தளத்தில் பெயரை மாற்றிய எலோன் மஸ்க்

உலகின் முன்னணி பில்லியனரான எலோன் மஸ்க், சமூக ஊடக தளமான எக்ஸில் தனது பெயரை செவ்வாயன்று (டிசம்பர் 31) "கெகியஸ் மாக்சிமஸ்" என்று மாற்றியமைத்துள்ளதுடன், சுயவிபரப் படத்தையும் புதுப்பித்துள்ளார்.

உலகின் பிரபல சமூக வலைத்தளமாக இருந்த டுவிட்டரை இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஸ்பேஸ் எக்ஸ், டெஸ்லா நிறுவனருமான எலோன் மஸ்க் விலைக்கு வாங்கினார். டுவிட்டரின் பெயரை எக்ஸ் [X] என்று மாற்றிய எலோன் மஸ்க் பல உயர்மட்ட ஊழியர்களை பணிநீக்கம் செய்து அந்த வலைத்தளத்தின் கட்டமைப்பிலேயே பல மாற்றங்களைக் கொண்டு வந்தார். இந்த நிலையில் அவர், தனது எக்ஸ் ஐடியின் பெயரை "கெகியஸ் மாக்சிமஸ்" என்று மாற்றம் செய்துள்ளார். மேலும் தனது ஐடியின் முகப்பு படத்தையும் மாற்றி, பெபே தவளை மீமில் வரும் புகைப்படத்தை முகப்பு படமாக வைத்துள்ளார்.




தீவிர வலதுசாரி குழுக்களால் பயன்படுத்தப்படும் ஒரு நினைவுச்சின்னமான பெப்பே த ஃபிராக் என்ற கதாபாத்திரத்தை சித்தரிக்கும் அவரது புதிய சுயவிபவரப் படத்திற்கான உடனடி விளக்கத்தை அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்பின் நெருங்கிய நம்பிக்கைக்குரியவரான எலோன் மஸ்க் வெளியிடவில்லை. அதே சமயம் இந்த மாற்றத்திற்கு பிறகு கெகியஸ் எனும் மீம் நாணயத்தின் மதிப்பு 500% அதிகரித்துள்ளது. இணையத்தில் வைரலாக மீம்களின் அடிப்படையில் உருவாக்கப்படும் மீம் நாணயங்கள் மின்னியல் வகையை சார்ந்தது ஆகும்.2000 ஆம் ஆண்டு வெளியான கிளாடியேட்டர் திரைப்படத்தின் நாயகனின் பெயர் மாக்சிமஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பு நாடாகிறது தாய்லாந்து

பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பு நாடுகளில் ஒன்றாக தாய்லாந்தும் இணைவதாக தாய்லாந்து நாட்டின் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதன்படி, 2025ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி முதல் அந்நாடு பிரிக்ஸ் அமைப்பில் உறுப்பினர் அந்தஸ்து பெறுகிறது. இதுபற்றி தாய்லாந்து நாட்டின் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்தியில், பிரிக்ஸ் அமைப்பின் 2024ம் ஆண்டுக்காக தலைமையையேற்ற ரஷ்யா, கடந்த 2024ம் ஆண்டு டிசம்பர் 28ம் திகதி வெளியிட்ட செய்தியில், 2025ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி முதல் பிரிக்ஸ் நாடுகளில் ஒன்றாக தாய்லாந்தும் இணையும் என உறுதிப்படுத்தி இருந்ததாக அமைச்சக செய்தி தெரிவிக்கின்றது.

இதனால், உறுப்பினர் நாடுகளுடனான பொருளாதார உறவுகளை மேம்படுத்த உதவும் வகையில் ஒத்துழைப்பு



இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சகம் தெரிவிக்கின்றது. தாய்லாந்து நாட்டுடன் பெலாரஸ், பொலிவியா, இந்தோனேசியா, கஜகஸ்தான், கியூபா, உகாண்டா, மலேசியா மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய 8 நாடுகளும் முதல் பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பினர் நாடுகளாகின்றன. பிரிக்ஸ் அமைப்பானது 2006ம் ஆண்டு ரஷ்யாவால் நிறுவப்பட்டது. இதில், ரஷ்யா, சீனா, இந்தியா மற்றும் பிரேசில் நாடுகள் உறுப்பினராக இருந்த நிலையில், 2011ம் ஆண்டு அந்நாடுகளுடன் தென்னாபிரிக்கா நாடும் இணைந்தது.

# சுவிற்சர்லாந்தில் முகத்தை மறைக்கும் உடை அணிய தடை

சுவிற்சர்லாந்தில் பொதுவெளியில் முகத்தை மறைக்கும் வகையிலான உடை அணிய தடை விதிக்கும் சட்டம் அமுலுக்கு வந்துள்ளது. சுவிற்சர்லாந்து நாட்டில் மக்கள் பொதுவெளியில் முகத்தை மறைக்கும் வகையிலான உடை அணிய தடை விதிப்பது குறித்து கடந்த 2021ம் ஆண்டு மார்ச் மாதம் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த வாக்கெடுப்பில் பொதுவெளியில் முகத்தை மறைக்கும் வகையிலான உடையை அணிந்து செல்ல தடை விதிக்க வேண்டுமென பெரும்பாலா




னோர் (51 சதவீதம்) ஆதரவுஅளித் தனர். இதையடுத்து, இது தொடர் பாக அந்நாட்டு அரசு கடந்த நவம் பர் 6ம் திகதி புதிய சட்டத்தை நிறை வேற்றியது. அந்த சட்டம் 2025 ஜனவரி 1ம் திகதி முதல் அமுலுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டது. இந்நி லையில், பொதுவெளியில் முகத்தை மறைக்கும் வகையிலான உடை அணி வதை தடை விதிக்கும் சட்டம் சுவிற்சர்லாந்தில் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தென்கொரிய விமான விபத்து; கறுப்புப் பெட்டி தரவுகள் மீட்பு

கடந்த ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 29) விபத்துக்குள்ளான ஜெஜு ஏர் விமானத்தின் கறுப்புப் பெட்டியில் இருந்து தரவுகள் பிரித்தெடுப்பதை புலனாய்வாளர்கள் முடித்துவிட்டதாக தென் கொரியாவின் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது. காக்பிட் குரல் பதிவில் **(cockpit voice recorder)** இருந்து தரவு இப்போது ஆடியோ கோப்பாக மாற்றப்படும், அதே நேரத்தில் இரண்டாவது கருப்பு பெட்டி – ஒரு விமான தரவு பகுப்பாய்வுக்காக அமெரிக்காவிற்கு அனுப்பப்படும் என்று அமைச்சின் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

காக்பிட் குரல் ரெக்கார்டர் ஆனது விமானிகளின் உரை, விமான போக்குவரத்து கட்டுப்பாடு அறையுடனான உரை, விமானத்தின் சுவிட்ச் மற்றும் விமான இஞ்சின் ஒலியென அனைத்தையும் பதிவு செய்கிறது. இந்த தரவுகள் விமான விபத்துக்கு வழிவகுத்த முக்கியமான தருணங்களைப் பற்றிய நுண்ணறிவுகளை வழங்கும் என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர். தாய்லாந்திலிருந்து தென்கொரியாவுக்கு 181 பயணிகளை சுமந்து வந்த ஜெஜு ஏரின் 7C2216 விமானம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முவான் சர்வதேச விமான நிலையத்தில் ஓடுபாதையில் அடிப்பகுதி உரசியபடி சென்ற நிலையில்,



திடீரென ஓடுபாதையில் இருந்து விலகி பலத்த வேகத்தில் சுற்றுச்சுவரில் மோதியது. இதனால் விமானம் முழுமையாக தீப்பிடித்து எரிந்தது. இந்த விபத்தில் மொத்தமாக 179 பேர் உயிரிழந்திருந்தனர்.

இது தென்கொரிய மண்ணில் நடந்த மிக மோசமான விமான விபத்து ஆகும்.

Sports விளையாட்டு
oruvansports@gmail.com

# அவுஸ்திரேலியாவின் மிட்செல் ஸ்டார்க் காயத்தால் பாதிப்பு

## விளையாடுவதில் சந்தேகம்





அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் விலா எலும்பு காயத்தால் அவதியடைந்து வருவதாக விக்கெட் கீப்பர் அலெக்ஸ் கேரி தெரிவித்துள்ளார்.

இதனால், வெள்ளிக்கிழமை (03) நடைபெறும் இந்தியா - அவுஸ்திரேலிய 5 வது மற்றும் இறுதி போட்டியில் ஸ்டார்க் விளையாடுவாரா என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

34 வயதான மிட்செல் ஸ்டார்க் பாக்ஸிங் டே டெஸ்ட்டிலும் காயத் தால் அவதிப்பட்டு வந்தார். இருப்பினும், பிசியோ தெரபிஸ்ட்டின் உதவியால் அவரால் நன்கு பந்துவீச முடிந்தது.

ஸ்டார்க்கின் காயம் குறித்து அவுஸ்திரேலிய விக்கெட் கீப்பர் அலெக்ஸ் கேரி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறுகையில்,

“அவர் நலமுடன் இருக்கிறார். காயத்தில் இருந்து மீண்டு வருவார். நான் ஸ்டார்க்குடன் நீண்டகாலமாக விளையாடி வருகிறேன்.

உலகில் உள்ள விளையாடுவதற்கு மிகவும் கடினமான வீரர்களில் ஸ்டார்க்கும் ஒருவர். அவர் விலா எலும்பு காயத்தால் அவதியடைந்தாலும் கூட அவர் விளையாடத் தயாராக இருப்பார்” எனக் கூறினார்.

2014-2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர், பார்டர் - கவாஸ்கர் கிண்ணத்தை வெல்லுவதற்கு, அவுஸ்திரேலிய அணி 5-வது போட்டியில் வெற்றி அல்லது சமன் செய்ய வேண்டியது கட்டாயம். இருப்பினும், இந்திய அணி கடைசிப் போட்டியில் வெற்றிபெற்றால், 5-வது முறையாக கிண்ணத்தை தக்கவைத்துக் கொள்ளும்.

ஒருவேளை மிட்செல் ஸ்டார்க்கு ஓய்வு அளிக்கப்பட்டால், அவருக்குப் பதிலாக ஜே ரிச்சர்ட்சன் களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து ஜே ரிச்சர்ட்சன் கூறுகையில், “விளையாடுவது பற்றி நான் அதிகம் சிந்திக்க விரும்பவில்லை. ஆனால், வாய்ப்பு கிடைத்தால் என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன்” என்றார். அவர் கடைசியாக 2021 ஆம் ஆண்டு அடிலெய்டில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான பாக்ஸிங் டே டெஸ்ட் போட்டியில் 5 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# 2025இல் இந்திய கிரிக்கெட் அணி போட்டி விபரங்கள்



2025 ம் ஆண்டு இந்திய கிரிக்கெட் அணி விளையாடும் போட்டி விவரங்கள் முழுவதும் வெளியாகியுள்ளன.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நாளை 3 ஆம் திகதி சிட்னி மைதானத்தில் நடைபெறவுள்ள 5-ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியோடு இந்த ஆண்டு இந்தியாவில் போட்டி ஆரம்பமாகிறது.

இதையடுத்து ஜனவரி மாதம் இங்கிலாந்து அணிக்கு எதிராக ஐந்து 20 ஓவர் மற்றும் 3 ஒருநாள் போட்டிகள். அடுத்ததாக பெப்ரவரி-மார்ச் மாதம் ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கிண்ணம்.

ஜ"ன் மாதம் இங்கிலாந்தில் 5 டெஸ்ட் போட்டிகள்,பங்களாதேசத்தில் மூன்று ரி 20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர்.

ஒக்டோபரில் ஆசிய கிண்ணம் அதன்பின் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி 20 தொடர்.

அதை தொடர்ந்து அவுஸ்திரேலியாவில் ஒருநாள் மற்றும் ரி 20 தொடர். ஆண்டின் இறுதியில் தென் ஆபிரிக்கா சுற்றுப் பயணத்தில் 3 வடிவிலான தொடரிலும் விளையாடவுள்ளது. இந்திய அணி 2025 இல் 18 ரி 20 போட்டிகளிலும், 10 டெஸ்டிலும் 12 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடுகிறது.

# சிட்னியில் பிங்க் டெஸ்ட்

ஒவ்வொரு ஆண்டும் சிட்னியில் நடைபெறும் முதல் டெஸ்ட் போட்டி புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பிங்க் டெஸ்ட் என்ற பெயரில் நடத்தப்படுகிறது. இதனை பிரதிபலிக்கும் வகையில் தான் அவுஸ்திரேலிய வீரர்கள் பிங்க் நிற தொப்பி அணிந்து புகைப்படம் எடுத்துக் கொண்டுள்ளனர்.

அவுஸ்திரேலியா மற்றும் இந்தியா அணிகள் மோதும் ஐந்தாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னியில் நாளை 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது.




# இலங்கை றக்பி சங்கத்தின் நிர்வாகத் தெரிவு

SRI LANKA RUGBY SINCE 1879

பல சர்ச்சை மற்றும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்த இலங்கை றக்பி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் மற்றும் நிர்வாகத் தேர்வு 21ஆம் திகதி நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு யாப்பு சீர்திருத்தம் தொடர்பில் ஏற்பட்ட குழப்பத்தால் தாமதமாகி வந்த ரக்பி நிர்வாக தெரிவு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால்

தீர்க்கப்பட்டதை அடுத்து நிர்வாக தேர்வுக் குழுவை நியமிப்பதற்கான விசேட பொதுச் சபைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றதுடன், அதற்கமைய நிர்வாக தேர்வுக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கமைய ரக்பி சங்கத்தின் புதிய நிர்வாக குழுவை அமைப்பதற்கான தேர்தலுக்கு வேட்புமனுக்களை கோரியிருந்தது.

ரக்பி சங்கத்தின் நிர்வாக குழு தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்துள்ளதுடன், தேர்தலுக்கான மாகாண சங்கங்களின் வேட்புமனுக்கள் அண்மையில் ஏற்றுக்கொள் ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேல் மாகாண ரக்பி சம்மேளனத்தின் வேட்புமனு தாக்கலின் போது சங்கத்தின் முன்னாள் தலைவரும் சிறந்த ரக்பி நிர்வாகியுமான பசால் மொஹமட் 16 வாக்குகளைப் பெற்று ரக்பி நிறுவனத்தின் அடுத்த தலைவராகப் போட்டியிடவுள்ளதாகத் தெரியவருகிறது. ரக்பி தலைவர் பதவிக்கு மேல் மாகாண சங்கம் நடத்திய வாக்கெடுப்பில் முன்னாள் தலைவர்களான ரிஸ்லி இல்யாஸ் மற்றும் லசித குணரத்ன ஆகியோர் முறையே 8 - 5 வாக்குகளைப் பெற்றதாகத் தெரியவருகிறது. ரக்பி பிரதித் தலைவராக ரொஷான் டீன் பரிந்துரைக்கப்பட, உபதலைவர் பதவிக்கு எஸ்.டபிள்யூ. சாங், செயலாளராக வருண டி சில்வா மற்றும் பொருளாளராக ஏ.எச். எம். ரியாஸின் பெயர்கள் பெரும்பான்மை வாக்குகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மேல் மாகாண ரக்பி சங்கத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் தோல்வியடைந்த சில தரப்பினர்,யாப்பு சீரமைப்பு மேற்கொள்ளப்படாததால் சர்வதேச ரீதியில் தடை விதிக்கப்படலாம் என ஜனாதிபதி மற்றும் துறை அமைச்சருக்குத் தெரியப்படுத்தத் திட்டமிடுவதாகவும் தெரியவருகிறது.

ஆனால் தேர்தலுக்குப் பின்னர் இலங்கை றக்பி சங்கத்தின் யாப்பைச் சீர்திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேன்முறையீட்டு நீதிமன்றில் தீர்ப்பு வழங்கப்பட்ட நிலையிலும் அவ்வாறான முயற்சியில் இவர்கள் ஈடுபட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# 2024 இல் ஓய்வுபெற்ற 10 முதல் தர கிரிக்கெட் வீரர்கள்

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து 2024 ஆம் ஆண்டில், பல்வேறு அணிகளின் முக்கிய வீரர்கள் ஓய்வை அறிவித்துள்ளனர்.

இந்திய கிரிக்கெட் அணியில் கப்டன் ரோஹித் சர்மா, விராட் கோலி ஆகியோர் ரி20 உலகக் கிண்ணத்துடன் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்தனர்.

### ரோஹித் சர்மா

இந்திய கிரிக்கெட் அணியின் மூன்று வகை போட்டிகளுக்கும் கப்டனாக இருந்த ரோஹித் சர்மா, 2024 ஜ"ன் 29-ஆம் திகதி ரி20 உலகக் கிண்ணத்துடன், சர்வதேச ரி20 போட்டியிலிருந்து ஓய்வை அறிவித்தார்.

தற்போது, டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களில் இந்திய அணியின் கேப்டனாக தொடர்ந்து வருகிறார்.

### விராட் கோலி

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனான விராட் கோலியும், ரி20 உலகக் கிண்ணத்துடன் ஓய்வு அறிவித்தார். தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான ரி20 உலகக் கிண்ணம் இறுதிப் போட்டியில் இந்திய அணி 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதில், 59 பந்துகளில் 76 ஓட்டங்கள் குவித்து ஆட்டநாயகனாக, இந்திய அணி கிண்ணம் வெல்ல முக்கிய காரணமாக இருந்தார.

### டேவிட் வார்னர்

அவுஸ்திரேலிய அணியின் தொடக்க வீரரான டேவிட் வார்னர், ரி20 உலகக் கோப்பையில் சூப்பர் 8 சுற்றுடன் ஆஸ்திரேலிய அணி வெளியேறியவுடன் அனைத்து விதமான போட்டிகளிலிருந்தும் ஓய்வை அறிவித்தார்.

112 டெஸ்ட் போட்டிகளில் 8,786 ஓட்டங்கள், 161 ஒருநாள் போட்டிகளில் 6,932 ஓட்டங்கள், 110 ரி20 போட்டிகளில் 3,277 ஓட்டங்கள் குவித்துள்ளார். மொத்தம் 49 சதங்கள், 98 அரைசதங்கள் அடித்துள்ளார்.

### ஜேம்ஸ் ஆண்டர்சன்

42 வயதான இங்கிலாந்து பந்துவீச்சாளர் ஜேம்ஸ் ஆண்டர்சன், குறைந்த ஓட்டங்கள் வழங்கி, முக்கிய விக்கெட்டுகளை வீழ்த்தும் வீரராக இருந்த நிலையில், இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் அனைத்துவித சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வை அறிவித்தார்.

### ஷிகர் தவான்

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் எதிரணிக்கு நெருக்கடி அளிக்கும் இந்திய அணியின் தொடக்க வீரராக ஜொலித்தவர் ஷிகர் தவான். இளம் தொடக்க வீரர்களின் எண்ணிக்கை இந்திய அணியில் அதிகம் இருப்பதால், 2022 டிசம்பருக்கு பிறகு தவானுக்கு அணியில் வாய்ப்பு கிடைக்காமல் போனது.

அதனால், 2024 அனைத்து விதமான சர்வதேச மற்றும் உள்ளூர் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வை அறிவித்தார்.

167 ஒருநாள் போட்டிகளில் 17 சதங்கள், 39 அரைசதங்களுடன் 6,793 ஓட்டங்களை தவான் குவித்துள்ளார். 34 டெஸ்ட்டில் 2,315 ஓட்டங்கள் (7 சதங்கள், 5 அரைசதங்கள்), 68 ரி20 போட்டிகளில் 1,759 ஓட்டங்கள்(11 அரைசதங்கள்) எடுத்துள்ளார்.

### மொயின் அலி

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் ஜாம்பவான் மொயின் அலி, ஆஷஸ் தொடருக்கு பிறகு அனைத்துவிதமான கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வை அறிவித்தார்.

### டிம் சௌதி

நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளரான டிம் சௌதி இங்கிலாந்து அணியுடனான தொடருடன் ஓய்வை அறிவித்தவர். 776 சர்வதேச விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். நியூசிலாந்தின் அதிக விக்கெட்டுகள் எடுத்த பந்துவீச்சாளர் என்ற சாதனைக்கு சொந்தக்காரர்.

### ரவிசந்திரன் அஸ்வின்

106 டெஸ்ட்டில் 537 விக்கெட்டுகள், இதில், 37 முறை 5 விக்கெட்டுகள், 8 முறை 10 விக்கெட்டுகளை கைப்பற்றி சாதனை படைத்துள்ளார். டெஸ்ட்டில் அதிக விக்கெட்டுகளை கைப்பற்றிய 7வது வீரர் ஆவார். இந்தியாவின் இரண்டாவது பந்துவீச்சாளர்.

### டீன் எல்கர்

தென்னாபிரிக்க அணியின் டீன் எல்கர் அனைத்து விதமான சர்வதேச போட்டிகளில் இருந்தும் ஓய்வை அறிவித்தார். 86 டெஸ்ட் போட்டிகளில் 14 சதங்கள், 23 அரைசதங்களுடன் 5,347 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

### ஷகிப் அல் ஹசன்

பங்களாதேஷ் அணியின் கப்டனாகவும், சிறந்த சகலதுறை வீரராக திகழ்ந்தவர் ஷகிப் அல் ஹசன். இவர் டெஸ்ட் மற்றும் ரி20 சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்தார்.

71 டெஸ்ட் போட்டிகளில் 5 சதங்கள், 31 அரைசதங்களுடன் 4,609 ஓட்டங்கள் குவித்துள்ளார். 246 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். 19 முறை 5 விக்கெட்டுகளை எடுத்துள்ளார்.



இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 02 ம் திகதி வியாழக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.